திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

[illegible] : 8 8—7—55 வெள்ளி : 14 பக்ககள் : விலை 3 அணு மலர் : 49

சென்னை சர்க்கார்

பஸ் தொழிலாளர்களின் வேதனைக் குரல்

● ஆளவந்தார் ஆவன செய்வரா ? ●

சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்து (Madras Government Transport Workers) தொழிலாளர்கள் தங்களுக்குள்ளகுறைகளை சென்னை அரசியலாரிடமும், குறிப்பாக அந்த இலாக்கா அமைச்சரான தோழர் பரமேஸ்வரன் அவர்களிடமும் கடிதம் மூலமாக—நேரில் பலமுறை எடுத்துக் கூறியும் குறைபாடுகளை ஓரளவாவது தீர்க்க முன் வராதது கண்டு வருந்த வேண்டி யிருக்கிறது.

இன்று ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் 'கனம்' களாக மாறுவதற்குமுன் பாட்டாளி மக்களிடம் பேசிய பேச்சுக்களை—கொடுத்த வாக்குறுதிகளை 'கனம்'ஆன கோளாறினுல் மறந்து விட்டிருப்பினும் அரசியல் குறிப்புகளைப் புரட்டினுல் அச்சம்பவங்கள் உண்மையை எடுத்துக் காட்டும்.

வெள்ளையர் ஆட்சியில் தொழிற் சங்கங்களும் தொழிலாளத் தோழர்களும் பெற்றிருந்த குறைந்த பட்ச உரிமை, மதிப்பு ஆகியவைகள் கூட காங்கிரஸ் முகாமின் குடியரசு ஆட்சியிலே தரப்படுவதில்லை யென்பதை நாடு அறியும்.

தொழிலாளர்களின் உரிமை எந்த அளவுக்கு மதிக்கப்படுகிறதோ அல்லது காப்பாற்றப் படுகிறதோ அந்த அளவுக்குத்தான் ஆளவந்தார்களின் செயலும் ஏழை—நடுத்தர மக்களால் வரவேற்கப் படும். இதனை இன்றைய உள்நாட்டு 'கனம்'கள் உணராமல் வெறும் வாய்ப்பந்தல் போடுவது அறிவுடமையாகாது.

காங்கிரஸ் ஆட்சியில் ஏழை—நடுத்தர மக்களின் வாழ்வுதான் இரண்டுங்கெட்டான் தன்மையில் ஊசலாடி வருகிறது. அதிலும் தொழிலாளர்களின் அவல நிலையோ சொல்லி முடியாது.

உதாரணமாக சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்து இலாகாவில் ஏறத்தாழ 4000 பேர் வேலை செய்து வருவதாகத் தெரிகிறது. இந்த இலாகா மூலமாக ஆண்டு ஒன்றுக்கு பல லட்ச ரூபாய் லாபமும் வருவதாக சட்டசபையின் வரவு—செலவு கூட்டத்தில் நிதி அமைச்சரே கூறி யிருக்கிறார். இவ்வாறிருந்தும் அத்தொழிலாளர்களின் சாதாரண கோரிக்கையை நிறைவேற்றவும், அதே சமயத்தில் பொதுமக்களின் போக்குவரத்து வசதியை ஒழுங்கு படுத்தவும் சென்னை அரசியலார் முனைந்தார்களில்லை.

சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர் குறைபாடென்பது அத்தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல, பொதுமக்களையும் அக்குறைபாடுகள் மிகவும் பாதிக்கச் செய்கிறது.

சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர்களின் கோரிக்கைகளாவன : (1) பிராவிடண்ட் நிதி அளிக்க வேண்டும் (2) பெரிய பஸ்களில் முக்கிய நேரங்களிலாவது இரண்டு கண்டக்டர்கள் நியமிக்க வேண்டும் (3) கண்டக்டர்களுக்கு எட்டு மணி நேர வேலை யென்பது ஏட்டளவில்தானிருக்கிறதேயன்றி நடைமுறையில் குறைந்தது 10-மணி நேர வேலையாக யிருந்து வருகிறது 8 மணி நேரம் வேலை செய்தவுடன் அந்த கண்டக்டர் டிக்கட் கட்டுகள் பணம் முதலியவற்றை ஒப்படைக்க மேலும் 2-மணி நேரமாகிலும் காத்திருக்க நேரிடுகிறது என்று தெரிகிறது. எனவே அதிகப்படியான காலத்துக்கு தனிச்சம்பளமோ அல்லது 6-மணி நேரம்வரை வண்டியிலும் 2-மணி நேரம் டிக்கட்—பணம் ஒப்படைத்தல் ஆகியவைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் இவ்விதம்செய்தால் புதிதாக மேலும் சிலருக்கு வேலை கொடுத்துதவ முடியும். (4) தற்போதுள்ள நஷ்டஈடு அளிக்கும் (Gratuity) முறை மிக விசித்திரமாக யிருப்பதாகவும் தெரிகிறது. ஒரு தொழிலாளி இறந்தால்தான் நஷ்டஈடு கொடுக்கப்படும். அப்படி கொடுக்கப்படும் நஷ்டஈடு தொகையைப் பெறுவதோ இறந்தவர் மீண்டும் உயிர்பெற்று எழுவதுபோல அதிசயமாக யிருந்து வருவதாகத் தெரிவதால் இக்குறைபாடும் நீக்கப்பட வேண்டும் (5) டிரைவர்—கண்டக்டர் மற்ற தொழிலாளர்களுககு ஆரம்ப சம்பளமே ரூ 50 ஆகவும் அதே சமயம் வேலைகளின் (டிரைவர்-கண்டக்டர்) தன்மையைப் பொறுத்து அதிக சம்பளமும் கொடுக்கப் பட வேண்டும் இதுபோன்ற சாதாரண கோரிக்கைகளைத்தான் சர்க்கார் பஸ் தொழிலாளர்கள் கேட்டு வருகின்றனர்.

இவைகளில் 2-வது குறைபாடான பெரிய பஸ்களில் 2 கண்டக்டர்களை நியமிக்காதிருப்பதானது பொதுமக்களுக்கும் கண்டக்டர்களுக்கும் இடையே ஏற்படும் வீண் தொல்லைகளுக்குக் காரணமாயிருந்து வருவதை அதிகாரிகளே அறிவர். இவ்வாறிருந்தும் அதற்குப் பரிகாரம் தேடாமலிருப்பது பஸ் தொழிலாளர்களின் கோரிக்கையைப் புறக்கணிப்பது மட்டுமல்ல, பொதுமக்கள் கொடுக்கும் பஸ் கட்டணத்திற்கு பதிலாக வம்பை தேடிக்கொடுக்கும்பிரகஸ்பதி தன்மைக்கே ஒப்பாகும் என்பதை சர்க்கார் உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

நிற்க, இக்குறைபாடுகளைப் போக்க பணமில்லையே என்று சர்க்கார் கைவிரிக்கவும் முடியாது. ஏனெனில் சென்னை சர்க்கார் பஸ் போக்குவரத்து இலாகாவை எடுத்துக் கொண்டால் லாபகரமாகவே நடைபெற்று வருகிறதென சர்க்காரின் புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. 1954-55-ம் ஆண்டு கணக்குப்படி சர்க்கார் பஸ் போக்குவரத்தில் செலவு அனைத்தும் போக ரூபாய் 17,20,000 என்றும் மாதம் ஒன்றுக்கு பஸ் போக்குவரத்து இலாக்கா செலவுகள் (அதிகாரிகள் சம்பளம் உள்பட) 2 லட்ச ரூபாய் என்றும் இப்படி ஆகும் செலவுகளை யெல்லாம் நீக்கியே, 17 லட்ச ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு மிச்சப்படுவதாகக் கூறப்படுகிறது.

எனவே இவ்வித பெரும் லாபத்தைத் தேடித் தரும் சர்க்கார் பஸ் தொழிலாளர்களின் குறைந்த அளவு கோரிக்கையை நிறைவேற்ற நிதியில்லை யென்று நீலிக்கண்ணீர் வடிப்பதிலும் அர்த்தமிருக்க முடியாது.

சர்க்காருக்கு மற்றொன்றினையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். சென்னையில் டிராம் சர்வீஸ் நடந்து கொண்டிருக்கையில் எத்தனை பஸ்கள் ஓடிற்றோ அதே எண்ணிக்கைதான் இன்றும் ஓடிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் பஸ் நிலையத்தில் கொலுவீற்றிருக்கும் மற்ற பஸ்களை பவனிவர ஆவன செய்ய வேண்டும். இதனால் பொதுமக்களுக்கு வசதி செய்ததாக ஆவதுடன், வேலையில்லாது தவிக்கும் தொழிலாளர்களில் ஒரு சிலருக்காவது வேலை தேடித்தந்த நல்ல காரியத்தை சர்க்கார் செய்தது என்ற பெருமையுடன் சர்க்காரின் வருவாயும் பெருக வழிவகை ஏற்படும்.

எனவே சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர்களின் குறைபாடுகளை முதலமைச்சர் காமராசர் அவர்களும் பஸ் இலாக்கா அமைச்சர் பரமேஸ்வரன் அவர்களும் உடனடியாகக் கவனித்து நடைமுறையில் குறைகளைப் போக்கவும் வேண்டுகிறோம். சர்க்கார் பஸ் தொழிலாளர்களிடையே போட்டி சங்கங்கள் இயங்கி வருகின்றன என்ற காரணத்தால் அவர்களுக்குள் கட்டுப்பாடான தன்மையில்லை யென்பதால் அவர்களின் நேர்மையான உரிமைகளைப் புறக்கணிப்பது அநீதியாகும்.

சர்க்கார் பஸ் தொழிலாளர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறோம். தற்சமயம் சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர்களுக்கென மூன்று சங்கங்கள் இருப்பதாகக் கேள்விப் படுகிறோம். இம்மூன்று சங்கங்களில் தொழிலாளர்களையே தலைவர்—செயலாளர் மற்ற நிர்வாகிகள் என்றமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்கிவரும் சங்கத்தில் தான் அதிக உறுப்பினர்கள் சேர்ந்திருப்பதாகத் தெரிய வருகிறது. தொழிலாளர்களே நிர்வாகிகளாக யிருந்து சங்கத்தை நடத்துவதும், வேறெந்த அரசியல் கட்சிகளுக்கும் தங்களின் உழைப்பை பலியாக்காமல் சமயம் நேரும்போது மற்ற கட்சிகளின் உதவியை சங்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் நிர்வாக முறை அமைப்புதான் மிகவும் சிறந்ததாகும். அந்த முயற்சியில் இயங்கும் சர்க்கார் பஸ் தொழிற் சங்கத்தில் மற்ற இரு சங்கங்களை விட அதிகப்படியான உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர் என்றாலுங்கூட, பஸ் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையைப் பார்க்க குறைவென்றே கூறலாம்.

8-ம் பக்கம் பார்க்க

வடக்கும் தெற்கும்

அன்புள்ள நண்பா,

வணக்கம், நீ வரைந்திருந்த வரைவு வரப்பெற்றேன். கொண்ட மகிழ்ச்சியை விட கொள்ளும் வேதனை மிக அதிகம். ஏன் தெரியுமா? நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார் நலிவதைக் கண்டு, ஓயுதல் இன்றி அவர் நலம் எண்ணி உழைத்துவரும் பகுத்தறிவுப் பாசறையிலே பயிற்சி பெற்றவன் நான். நீ அத்தகையவனல்ல; எதிர் முகாமிலே இருப்பவன் 'ஏக இந்தியாவே எனது குறிக்கோள்' என்று முரசறைவிப்போன்! எங்களைப் பார்த்து ஏளனக் குரலிலே நையாண்டி செய்துவரும் கூட்டத்தில் ஒருவன்!

அவ்வித கொள்கை வேறுபாடு மலிந்த உன்னிடமிருந்து வரும் அஞ்சலில் எனக்கு வேண்டாத—கேட்டுக் கேட்டுச் சலித்துப் போன—பழைய பல்லவிகள் வருவது இயற்கைதான். என்றாலும், உன்னைப்போல கல்லூரி ஏறிய—எதையும் நன்கு சிந்தித்து நல்லதோர் முடிவுக்கு வரக்கூடிய இளைஞர் கூட ஏன் சிந்திக்க மறுத்து, எங்களைப் பற்றிய வேண்டாத எண்ணங்களை, மக்கள் மனதிலே நிலைநாட்ட முயலுகின்றனர்? மாற்றாரை வசைபுராணம் பாடி மகிழ்வதிலே ஓர் தனி இன்பம் காண்கின்ற தோழர்களில் நீயும் ஒருவன் என்பதை உனது அஞ்சலின் ஒவ்வொரு எழுத்தும் எனக்கு அறிவிக்கின்றன.

உன்னுடைய 'ஏக இந்தியா' கொள்கையை முன்பொரு முறை எழுதியிருந்தாயே, நினைவிருக்கிறதா? எந்தக் காலத்திலிருந்து தென்னாடும் வடநாடும் ஒன்றுபட்டு இருந்து வந்தது? எந்த அரசனின் ஆளுகையின் கீழ் தென்னகமும் வடநாடும் வாழ்ந்து வந்தது? விளக்கம் தரமுடியுமா உன்னால்? என்று உனது முந்தைய கடிதத்துக்கு நான் பதில் எழுதினேன். அதற்கு இன்றுவரை உன்னிடமிருந்து தக்க பதில் காணோம். ஆனால் முன்னர் எழுதியதையே நீ திருப்பித் திருப்பி எழுதிக் கொண்டிருக்கிறாய்!

இமயம் முதல் குமரிவரை எந்த மன்னன் ஆண்டான்' அக்பரா? அல்லது அவன் பேரன் ஷாஜஹானா? இல்லை அவன் மகன் அவுரங்கசிப்பா? இந்தியாவின் மீது பதினேழுமுறை படையெடுத்தானே கஜினி மூகமது அவனா? எவனது காலத்தில் தோழமை ஏற்பட்டது 'ஏகஇந்தியா?'

நீ கல்லூரியிலே பாடம் பெற்றுள்ளவன். இந்திய சரித்திரத்தின் ஒவ்வொரு பகுதியும் நன்குணர்ந்திருப்பாய். இந்திய சரித்திர ஏட்டினை முன்னால் விரித்து வைத்துக் கொண்டு, பக்கம் பக்கமாகப் புரட்டிப் பார். உனது ஏக இந்தியா கொள்கைக்கு ஆதாரம் இருக்கிறதா என்று!

ஆங்கிலேயரது ஆட்சிக்கு முன்பு, அகில இந்தியாவையும் கட்டியாண்ட அரசன் எவனையுமே நீ சரித்திர ஏடுகளிலிருந்து காண முடியாது! வெள்ளையர்களால்தான் அகில இந்தியாவையும் ஆட்சி செய்ய முடிந்ததே தவிர வேறெவராலும் முடியவில்லை—முடியாது. ஆங்கிலேயரது அகில இந்திய ஏகாதிபத்ய சுரண்டலுக்கு பாதையமைத்துக் கொடுத்தவர்களும் உன்னைப்போன்ற சிலர்தான் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஆசியாவின் ஜோதி—அகில உலக ராஜதந்திரி—இந்தியாவின் முடிசூடா மன்னர்—எங்கள் நேரு. அவரை உலகத்தின் இரும்புத் திரை" நாடு என்று சொல்லப்படும் ரஷ்யா அழைத்து சிறப்பிக்கும் முறையைப் பார்: மாஸ்கோ நகர வீதிகளிலே மலர் மாரி தூவி, மக்கள் பெருவெள்ளம் திரண்டெழுந்து வரவேற்கும் காட்சியைக் காண்! அப்படிப்பட்ட நேருவின் தலைமையில் இருக்க விருப்பமின்றி, பிரிந்துபோக விரும்புகிறீர்களே அதைப்போல பைத்தியக்காரத்தனம் வேறு உண்டா? என்றெல்லாம் எழுதியிருக்கிறாய். அதைப் படித்ததும் "அந்தோ பரிதாபம்!" என்றுதான் நான் கூறிக்கொண்டேன்!

ஒரு நாட்டின் தலைவர், மற்றொரு நாட்டுக்குச் சென்றால், நாட்டின் தலைவருக்குரிய தனிச் சிறப்புடன் அந்நாட்டினர் வரவேற்பதுதான் முறை. அதுபோலத்தான் ரஷ்யாவில் நேருவுக்கு அளிக்கப்படும் வரவேற்பும்!

நண்பா! யூகோஸ்லோவேகியா ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ இந்தியாவுக்கு வந்ததை நீ அறிவாய். அவருக்கு எப்படி ராஜோபசாரம் செய்தார்கள் என்பதை எண்ணிப்பார். அவர் வருகிற கப்பலை இந்தியக் கப்பல்கள் சென்று வரவேற்றன, மலர் மாலைக்குள் அவரை நிற்க வைத்து ஆயிரக் கணக்கான புகைப்படங்கள்; விருந்து, வேடிக்கை இத்தனைக்கும் மேலாக 'டிட்டோ ஜிந்தாபாத்' கூச்சல் வேறு!

இன்று ரஷ்யாவில் நேருவுக்கு சிறப்பான முறையில வரவேற்பும் தரப்பட்டால் தான், அடுத்து இங்கு விஜயம் செய்ய இருக்கும் மார்ஷல் புல்கானினுக்கும் இந்தியாவில் நல்ல வரவேற்பிருக்கும்.

அதுவும் இன்று நாம் காணும் புல்கானின் ரஷ்யாவுக்கும்' அன்றைய 'ஸ்டாலின் ரஷ்யாவுக்கும்' நிறைய வேறுபாடு உண்டு. அதை நீயும் நன்குணர்வாய் என எண்ணுகிறேன். அன்றைய 'ஸ்டாலின் ரஷ்யாவாக' இருந்தால், நேரு அங்கு செல்வாரா என்பதே சந்தேகத்துக்குரிய செய்தியாகும்.

'என்ன இருந்தாலும் நம்மிடையே சகோதரர்கள் என்ற உணர்ச்சி வேண்டும்; வடக்கு தெற்கு என்ற பேதம் கூடாது' என்று நல்லுரை போதிக்கிறாய்; வரவேற்க வேண்டிய கருத்துத்தான். ஆனால் இந்த உபதேசத்திற்கு நீ இங்கு சொல்லிப் பயனில்லை. வடக்கே உள்ளவர்களுக்குச் சொல்ல வேண்டும். ஏனெனில் எங்களுடைய உள்ளத்திலே பிரிவினை உணர்ச்சியைக் கிளப்பி விட்டவர்கள் அவர்கள்தானே.

வடக்கு வாழ வழி வகுத்துத் தரப்படுகிறது. தெற்கோ தேய்ந்து கொண்டே செல்கிறது என்று நாங்கள் கூறிய நேரத்திலே, எரிந்து விழுந்தீர்களே நீயும் உனது தோழர்களும். கனரகத் தொழில்கள் பற்றிய சர்க்காரின் பிரசுரம் ஒன்றை அண்மையில் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது அதிலிருந்து ஒன்றிரண்டு 'சாம்பிள்'கள் உனக்குத் தருகிறேன்:

டில்லியில் டி. டி. டி. மருந்து உற்பத்தி செய்யும் "பிரமாண்டமான" தொழிற்சாலை உள்ளது.

சிந்திரியில் சுமார் 25 கோடி ரூபாய் மூலதனத்தில் 'பெரிய' உர உற்பத்திசாலை அமைந்துள்ளது.

ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் ஜங்புராவில் ரெடிமேட் வீடு கட்டும் தொழிற்சாலை.

ஒரு கோடி முப்பது லட்ச ரூபாய் மூலதனத்தில் ரூப்நாராயண்பூரில் டெலிபோன் கம்பி உற்பத்திசாலை.

13 கோடி ரூபாய் செலவில் கண்ட்லா துறைமுக அபிவிருத்தி.

மூன்று கோடி ரூபாய் மூலதனத்தில் பம்பாயில் கல்யாண் 'பவர் ஹவ்ஸ்'

12 கோடி ரூபாய் மூலதனத்தில் அம்பர்நாத்தில் யந்திரக் கருவி உற்பத்திசாலை.

23 கோடி ரூபாய் மூலதனத்தில் அலிப்பூரில் நவீன நாணயத் தொழிற்சாலை.

இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மூலதனத்தில் புனாவுக்கருகில் பெனிசிலின் உற்பத்தி சாலை.

இது மட்டுமல்லாது இத்துடன் இரும்பு, எஃகு தொழில் அபிவிருத்திக்கு என எண்பது கோடி ரூபாய் வட இந்தியாவுக்கு ஒதுக்கி யுள்ளார்கள்.

மேற்கண்ட புள்ளி விவரங்களைக் கண்ட பின்பாவது ஏக இந்தியா—ஏமாற்று வித்தை! என்னும் உண்மை நிலையை உணர்வாயா?

அதுமட்டுமல்ல நண்பனே! இன்னும் கேள், வடவரின் வஞ்சகச் செயலை; நேரு சர்க்கார் வகுத்துள்ள 'நீதி'யை!

ஐந்தாண்டுத் திட்டம் வடக்கு வாழ வழி வகுக்கும், என்று நாங்கள் கூறிய போது எரிந்து விழுந்தாய். அதன் அருமை பெருமைகளை விளக்கி நீ கூட மேடையதிரப் பேசியிருக்கிறாய் பலமுறை. பத்திரிகைகளில் பக்கம் பக்கமாய் உனது பேச்சு வெளிவந்திருந்தது. ஆனால் அந்த ஐந்தாண்டுத் திட்டத்தால் தென்னாட்டுக்கு ஏதாவது பலனுண்டா?

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது, ஒரு இரும்பு எஃகு தொழிற்சாலையுடன், கேபிள், பத்திரிகைக் காகிதம் (நியூஸ் பிரின்ட்) ரசாயனங்கள் ரப்பர் டயர்கள் போன்றவைகளின் உற்பத்திக்கு பெரிய தொழிற்சாலைகளை சென்னை ராஜ்யத்தில் ஆரம்பிக்க வேண்டும்" என்று கோரி, தென்னிந்திய வர்த்தக சபையினர் ஒரு மனு தயாரித்துள்ளார்கள். அத்துடனல்லாது, 'இவ்விஷயத்தில் சென்னை ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரிடம கண்டிப்பாக இருக்க வேண்டும்.' என்றும் அந்த மனுவில் வற்புறுத்தியுள்ளனர்.

நமது நாட்டிலே தொழிற்சாலை ஏற்படுத்த நாம் அவர்களிடம் அனுமதி வாங்க வேண்டிய நிலையில் உள்ளோம்? ஏன் இந்த அவதி?

'நாம் அனைவரும் பாரதத்தாயின் புதல்வர்கள் என்று கூறும் 'அகில இந்தியக் கண்ணோட்ட' நண்பா! தென்னாட்டை ஏன் உனது வடநாட்டு 'சோதரர்கள்' புறக்கணிக்கிறார்கள்? தென்னகத்தில் தொழிற்சாலை நிறுவ, நமது ராஜ்ய சர்க்கார் டில்லிப் பீடத்திடம் 'கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டிய நிலையிலுள்ளதே ஏன்? நம்முடைய சகோதரர்கள் என்ற உணர்வு அவர்களிடம் சிறிதளவேனும் இருக்குமானால், நம்மிடையே மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வார்களா?

இங்கே எங்கு காணினும், டால்மியாபுரத்தை, டாட்டாபுரத்தை, காந்திபுரத்தை கஸ்தூரி கிராமத்தை, நேரு சபையை, நேத்தாஜி சலவைச்சாலையை, ஜெயப் பிரகாஷ் தெருவைக் காண முடியும். ஆனால் வடநாட்டில் எங்கேனும் ஓரிடத்தில் காமராஜபுரத்தைக் காண முடியுமென்று நினைக்கிறாய்? கவர்னர் ஜனரலாக, இலாகா இல்லாத மந்திரியாக எல்லாம் மத்திய சர்க்காரிலே பதவி வகித்தவர்தானே திரு. சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்கள், அங்கு அவருடைய பெயரில் ஒரு சாயாக்கடைகூட கிடையாது என்று நான் கூறினால் நீ ஆத்திரப் படமாட்டாய் என எண்ணுகிறேன்.

நண்பா! இன்றுமட்டுமல்ல என்றுமே வடக்கும் தெற்கும் ஒன்று சேர்ந்து வாழ முடியாது. வேண்டுமானால் வடநாட்டினருக்கு ஓரளவு மனவளம் ஏற்பட்டால் இரு நாடுகளும் நேசநாடுகளாக வாழ முடியும். எனவே 'ஏக இந்தியா' என்று கூப்பாடு போட்டுக்கொண்டு ஏமாற்றப் படுகுழியில் வீழ்ந்துவிடாதே. எதையும் நன்கு சிந்தனை செய்து ஓர் முடிவுக்கு வா.

அன்புள்ள,
அ. மருதவாணன்

சுவைத்துப் பாரீர்

டபிள்யூ. பி. டி. எழிலன்

கிரீஸ் அழகி !

சென்ற வாரம் 'மிஸ் பனமா'வைப் பற்றிப் படித்தோம். இவ்வாரம் 'கிரீஸ் தேசத்து அழகு ராணி'யைப் பற்றி அறிய வேண்டி வருகிறது.

ஏதென்ஸ் நகரத்திலே ஓர் கேளிக்கைக் கூடம். அதைச் சுற்றி பலத்த ஆயுதந் தாங்கிய போலீஸ் படைகள்! ஜூன் 25-ம் நாளன்று, கிரீஸ் தேசத்து இவ்வாண்டு அழகு ராணி யாரென்ற பலத்த போட்டி அங்கே நடைபெற்றது.

மிஸ் ஸனியா ஜாய்டோ 'பிரைஸ்' அடித்தார், அவருக்கு 'ஸ்டார் ஆப் கிரீஸ், பட்டம் வழங்கப்பட்டது. முடிசூட்டு விழாவும் குதூகலத்தோடு நடந்தேறியது. கிரீஸ் அழகியின் விழாவை நடத்தி வைக்க ஐரோப்பா அழகி (மிஸ் யூரோப்) —இங்லாடன் பெர் என்ற மாது—வந்திருந்தாள். இவ்விரு அழகிகளைக் காண அந்த 'நைட் கிளப்'பில் குவிந்து வழிந்த மக்களது பல தரப்பட்ட உணர்ச்சிப் பெருக்கினையும், ஆடின ஆட்டத்தையும், பிறவற்றினையும் கூறவும் வேண்டுமோ?

இவ்விதமாகப் போட்டியில் தேறிய 'மிஸ் கிரீஸ்' காலிஃபோர்னியாவில் நடக்கவிருக்கும் 'மிஸ் யூனிவர்ஸ்' போட்டியில் கலந்து கொள்ளக் காத்திருக்கிறார்.

மக்கள் எதிர்ப்பின்றி அவ்வழகுப் போட்டி நடந்ததா என்றால் இல்லை! பலத்த போலீஸ் பந்தோபஸ்துடன்தான் அவ்வைபவம் நடைபெற முடிந்தது! காரணம்?

அழகுப் போட்டி ஒழுக்கக் கேட்டை வளர்ப்பது! மக்களை தவறான பாதைக்குத் தள்ளிச் செல்லக்கூடிய அநாகரிகம்! நம் நாட்டிற்கு ஏலாதது! கூடாதது! ஒவ்வாதது! அழகுப் போட்டி ஒழிக! அநாச்சாரம் அறவே ஒழிக! அநாகரிகம் அடியோடு சாய்க! என்றவாறெல்லாம் முழங்கிக் கொண்டு வெள்ளம்போல் இரண்டாயிரம் அறப்போர் வீரர்கள் மறியல் செய்ய துடிதுடித்தார்களாம்! அழகுப் போட்டியை நிறுத்த பெருமுயற்சி செய்தார்களாம்! ஆனால் மடை திறந்தாற் போல் ஆயுதந் தரித்த போலீஸ் படை அவர்களை தடுத்து அழகு ராணிக்கு அரண் என நின்றதாம். அந்த அழகில்தான் 'கிரீஸ் அழகி' 'ஸ்டார் ஆஃப் கிரீஸ்' ஆக முடிந்தது.

இதில் கவனிக்கத் தக்கது என்னவென்றால், பல நாடுகளும் அழகுப் போட்டியை வெறுத்தொதுக்கவே துடித்து நிற்கின்றன என்பதுதான், எனவே அழகுப் போட்டி கண்டிக்கத்தக்கது.

யாருக்கு நோபல் பரிசு ?

தகாதவர்களிடத்தி லெல்லாம் இந்தப் பணம் என்பது சிக்கிக் கொண்டு படாத பாடுபட்டு வருகிறது. பல வழிகளில் பாழாகியும் வருகிறது. இத்தகு பெரிய ஓட்டைகளை அறவே அடைக்க என்றுதான் திராவிடத்தில் வழி பிறக்குமோ தெரியவில்லை,

பணம் பக்தியின் பெயராலும், முக்தி மார்க்கத்தின் பெயராலும் எவ்வெவ்வெகைகளில் பாழாகிக் கொண்டு வருகிறது என்பதை அவ்வப்போது '**திராவிடன்**' எடுத்துக் காட்டிக் கொண்டுதான் வருகிறது.

இன்று நம்மிடை புரட்சி மனப்பான்மை இல்லாமலில்லை. அது புகைச்சலில்தான் இருந்து வருகிறது. புகைச்சலுக்குப் பின் தீ! திக்கெட்டும் பரவிடும் புரட்சித் தீ, திராவிட நாட்டை மீட்டே கொடுக்கும். இரத்தமின்றி, கத்தியின்றி சாத்வீக முறையிலேயே கிடைக்க வேண்டிய திராவிட நாட்டில், விழலுக்கு இறைக்கப்படும் பணம் மக்கள் முன்னேற்றத்தின் பக்கமே திருப்பப்படும் என்பது மட்டும் உறுதி! உறுதி!! உறுதி!!!

எங்களிடம் இருக்கும் பணத்தை கோயில் கட்டத்தான் கொடுப்போம், வைரமுடி செய்து வெங்கடாசலபதிக்கும், பத்திரிநாத் நாராயணனுக்குந்தான் சூட்டுவோம், கும்பாபிஷேகம், விழா முதலியவைகள் நடத்தியேதான் தீருவோம் என்றவாரெல்லாம் கூறினால்—அங்ஙனமே செய்தால் அதை அர்த்தமுள்ள வாதம் என்று எவரே ஏற்பர்? பகுத்தறிவு அற்ற பேதமையல்லவா? ஆம்! என்றார் காந்தியார். எப்படி? '**வேசையர் விடுதி—கோயில்**' என்று கூறிப் போந்தார்! காந்தியார். இயேசுநாதர் என்ன கூறினார்? **கள்ளர் குகை—கோயில்** என்றார். அண்மையில் நம்மைவிட்டுப் பிரிந்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. என்ன கூறினார்? **உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி, வருந்தும் ஏழை மக்களைக் கனவிலும் கருதாது, கடவுளன்பு கடவுளன்பு என்று எத்துணைபேர் கோயில் கட்டுகிறார் வெள்ளித் தேர் செய்கிறார்! இத் தொண்டை ஆண்டவன் ஏற்றுக் கொள்வானோ?** என்று 1924-லேயே கூறினாரே!

இவர்களெல்லாம், சாமி! சாமி! என்றழைக்கப்படும் கற்குழவிகளை யெல்லாம் ஜல்லியாக உடைத்து ரோடு போடச் சொல்லும் **பெரியார் ஈ. வெ. ரா.**வைப் போன்ற நாத்திகர்களா ?

காந்தியார் பரம கீதா பக்தர்! ராம்துன் பஜனை பாடியவர். திரு. வி. க. பழுத்த சைவ மெய்யன்பராய் ஒருகாலைத் திகழ்ந்தவர்! அத்தகையோர்களின் கூற்றையும்செவி மடுக்க மறுக்கின்றார்கள் என்றால் அவர்களை எம்மொழியால் இரங்குவது ?

மேலே கூறிய பெரியார்களின் நற்போதனைகளை இன்று ஓரளவு சீர்தூக்கிப் பார்க்கும் ஆஸ்தீகத் தலைவர் ஒருவர் உண்டென்றால் அவர் குன்றக்குடி மடாதிபதி என்று ஒருவகையில் சொல்லலாம். அவரது தற்போதய பேச்சுகளெல்லாம் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. 'மாடலில்' தொனித்து வருகிறது! முதன் முதலில் கோயில் அர்ச்சனைகளெல்லாம் தமிழில் இருக்க வேண்டுமென்று முழங்கினவரே திரு. வி. க.தான்! அதனாலன்றோ அடிகளார், பொன்னுடைப் போர்த்தி திரு. வி. க.வைப் போற்றினார் ?

ஆனால் **திருப்பனந்தாள் அருள்நந்தி தம்பிரான் சுவாமிகளின்** போக்கைப் பாருங்கள். தில்லை நடராசர் சந்நதியின் **வாயிற்படிக்கு வெள்ளி முலாம்பூச** ஏற்கனவே **ஏழாயிரம் (7000) ரூபாய்** அருளினாராம்! அது போதாமல் இன்னும் நாலாயிரம் (**4000**) ரூபாய் அருளியிருக்கிறாராம்!! ஆக மொத்தம் பதினொரு ஆயிரம்ரூபாய் வெள்ளி முலாம்பூச! எதற்கு? சிற்றம்பலத்து வாயிற்படிக்கு!

இப்போது 'நோபல்' பரிசு வழங்கும், அதிகாரம் மட்டும் என் கையிலிருந்தால், முதலில் இத்தகைய 'தர்ம கைங்கர்யம்' செய்யும் கொடை வள்ளல்களுக்குத்தான் கண்டிப்பாய் வழங்குவேன்.

அதைவிடுத்து ஏதோ **மனிதாபிமானமாம்! பிறஉயிரை தன்னுயிர்போல் நினைத்து மக்கள் சேவை செய்தல்தானும் கடவுள் வழிபாடு!** அப்படி கூறிக் கொண்டு ஆஃபரிக்காவில், பிரெஞ்சு காங்கோ பகுதியில், ஓகோவே நதிதீரத்தில் **லம்பரைன்** என்ற ஊரில், யாரோ ஒரு கிழவர், மக்கள் எல்லாம் குஷ்டரோகத்தால், தோல் அரிக்கப் பட்டு, அங்கங்கள் தின்னப்பட்டு புழுத்து மடிகிறார்களாம்! அவர்களை காப்பாற்றுவதுதான் கடவுள் அன்பாம்! கடவுள் காணிக்கையாம்! அப்படி ஒரு பித்துப் பிடித்துப்போய் வாலிப வயதிலிருந்து இன்றைய தள்ளாத வயது வரை, தொடர்ந்தாற்போல் ஐம்பது ஆண்டு காலமாய்! தாங்கொணா பூமத்தியரேகை சீதோஷ்ண நிலையையும் பொருட்படுத்தாது கடும் மழையானாலும், கொடும் வெயிலானாலும், என் கடன் மக்கள் பணி செய்தலே, அதுவே எனது ஆண்டவன் கட்டளை! எனது உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அர்ப்பணிப்பேன் என்று கூறி அவ்வண்ணமே ஒழுகி வருகிறாராம் ஒருவர்! அவர் விஞ்ஞானப் பேராசிரியராம்! வைத்திய வள்ளலாம்! **பழுத்த ஆஸ்தீக சிகாமணியாம்!** யாரோ **ஆல்பர்ட் சுவிட்சராம!** அவரது குஷ்டரோக நிவாரணத் தியாகத்தை மெச்சி கடந்த ஆண்டு **நோபல் பரிசு** தந்தார்களாம் அப் பெரியாருக்கு!

நான் கேட்டிருக்கிறேன்! வாயிற் படிக்கு வெள்ளி முலாம் பூச பதினொரு ஆயிரம் வெள்ளிக் காசு அளித்தலைவிட, மக்கள் சேவையாம் குஷ்ட ரோக நிவாரணம்—என்ன தியாகத்தில் சிறந்ததோ? யாருக்காவது துணிச்சலிருந்தால் கூறட்டுமே பார்க்கலாம்.

மௌடீகம்!...ஓங்குக!...எங்கே ?...தமிழகத்தில்!...ஏன்!...புரட்சி காண!—புரட்சி ...ஓங்குக!

அரசியல் அரிச்சுவடி !

இந்தியாவைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டிய முதன்மையான விஷயம், என்னவென்றால் ஐரோப்பிய கருத்துக்கள் பிரதிபலிக்கும் முறையில் பிரதேச ஒற்றுமையோ, அரசியல் ஒற்றுமையோ, உடைய இந்தியா என்று ஒன்று எப்போதும் இருந்ததில்லை. இப்போது இருக்கவுமில்லை—இந்தியாவிற்குள் அத்தகு தேசமும் இல்லை.

—**ஜான் ஸ்ட்ராட்ச்சி**

இந்தியா ஒரு தேசிய இனம் என்பது அரசியல் விஞ்ஞானம் பிரதான நோக்கமாகக் கொண்டு, நீக்க முயலும் இழிவான தவறை அடிப்படையாகக் கொண்ட கருத்து- இந்தியா என்பது ஒரு அரசியல் பெயரல்ல. ஐரோப்பா, ஆப்பரிக்கா இவைபோல அதுவும் ஒரு பூகோளப் பெயர். ஒரு தேசிய சமூகத்தின் பிரதேசத்தை, ஒரு மொழியின் பிரதேசத்தை அது குறிக்கவில்லை. பல தேசிய சமூகங்களும், பல மொழியினர் வாழும் பிரதேசத்தையே அது குறிப்பிடுகிறது.

—**ஸர் ஜான்ஸ்லி**

இந்தியாவிலும் கூட பூர்ஷ்வா வளர்ச்சியின் விளைவாக அதுவரை மறைந்து கிடக்கும் பல்வேறு தேசிய இனங்கள் உயிர் பெற்றெழுவதை அநேகமாகக் காணலாம்,

—**ஸ்டாலின்**

10. இராதாமணாளன்

★

தோழர். டி. கே. சீனிவாசனுக்குப் பின் சிறுகதை இலக்கியத்தில் புதிய மெருகைத் தந்தவர் இராதா மணாளன். அண்ணாவின் பாணியைப் பின்பற்றி துவக்கத்தில் இவர் எழுதிய சிறு கதைகள் அனைத்தும் நல்ல மொழி நடையால் போற்றுதலைப் பெற்றன.

'தித்திக்கும் கதை என்பார்களே' அந்த சிறப்பிற்கு முழுக்க முழுக்க உரிமையானவை மணாளனின் சித்திரங்கள். பாத்ரங்களின் பன்பு, மனோத்துவம், கதை இயல்பு போன்றவைகளுக்கு அதிக விளக்கங்களை சிலவிடாமல், சின்னஞ்சிறு அளவில் நிகழ்ச்சிகளை மட்டுமே பின்னி ஒப்பற்ற உயிரோவியங்களை படைப்பதில் இவர் வல்லவர். இது புதுமையல்ல—எண்ணற்ற இளம் எழுத்தாளர்கள் இந்த பாணியிலேதான் எழுதுகிறார்கள் எனினும் இராதாமணாளனின் எழுத்துகளில் உணர்ச்சியின் ஜீவப் பிரளயம் சுழலிடுகிறது. வாழ்வின் கனவு தெரிகிறது. துணிவான கற்பனை பராட்டுதலைப் பெறுகிறது. தேய்ந்த சொற்களோ தேவையற்ற வருணனையோ கதையின் நல்ல இயல்புகளை கொள்ளை கொண்டு விடாது.

துவக்கத்திலேயே பாத்திரங்களின் வடிவம் சில சொற்களிலே காட்சியாகும். கதையின் கரு, நிகழ்ச்சி, உரையாடல் இந்தப் பண்பும், வேகமும் இறுதிவரை தேங்காது சுவை வழங்கும். அண்ணாவின் இந்த தனித்த பாணியை இவர் புதுமையோடு எழுதினார்.

நல்ல உவமைகள் மணாளனின் மற்றொரு சிறப்பு. போதுமான அளவு இந்த செல்வத்தை அவர் பெற்றிருக்கிறார். இனிய சொற்களில் சுவையான கதைகள்! இராதா மணாளனின் எழுத்துக்களுக்கு இந்த விளக்கமே போதும்!

வரலாற்று சார்பினதான இவரது மூன்று சிறு கதைகளைத் தொகுத்து **'பேசும் பிணம்'** எனும் தலைப்பில் திராவிடன் பதிப்பகத்தார் வெளியிட்டனர். மிகுந்த பொருட் செறிவும், அலங்கார வருணனையும் நிரம்பிய இந்தக் கதைகள் மணாளனின் இலக்கிய பணிக்கு நல்லதொரு நிலையை உருவாக்கின.

கதையின் பாணியும், நிகழ்ச்சிகளின் கோர்வையும் புதுமையாயிருந்தன. அண்ணாவின் தனிப் பண்பை தனக்கென பக்குவப் படுத்திக் கொண்ட ஆற்றல் அங்கங்கே மிளிர்ந்தது. படிப்போருக்கு விதவிதமான உணர்ச்சிகளை வழங்குவதில் ஆசிரியர் நிறைந்த வெற்றியை பெற்றிருந்தார், வரலாற்று நிகழ்ச்சிகளை பண்பு நிறைந்த பாடமாக—அதேபோது இலக்கிய வண்ணம் பெற்ற சிறுகதையாக முதன் முதலில் எழுதிய பெருமை இராதாமணாளனையே சாரும். ஏனெனில் பிறரின் கதைகள் முழுக்க முழுக்க புள்ளிவிபரப் பட்டியல்களாகவோ அல்லது கற்பனை கதைகளாகவோ, காட்சியளிப்பன. இரண்டையும் பிணைத்து, வரலாற்று நிகழ்ச்சி முறிந்து விடாது இராதாமணாளன் எழுதினார்—இதுவே இவரின் தனி இயல்பு—பெருமை!

பின்னர் வெளிவந்த **ருஷ்ய நாட்டு அழகி** நல்ல தொகுப்பு. கதைகளை எல்லாம் சுவைப் பிழம்புகள் எனலாம். அத்தகு அழகும் புயலும் நிரம்பியிருந்தது இராதாமணாளனின் எழுத்துக்களில். தொடர்ந்து இவர் எழுதிய **துளிதேன், புதுவெள்ளம், கந்தலீலா, மயானத்தில் முத்தம்** ஆகிய கதைத் தொகுப்புகள் இவரது புகழை வளர்த்தன.

இலட்சியங்களுக்கு கலைத்தன்மையை கொள்ளை கொடுக்காது எழுதவோரின் படைப்புகள் மக்களின் வரவேற்பை விரைவிலே பெற்று விடுகின்றன. அண்ணா, சீனி



* *

வாசன், தணலன், கருணாநிதி ஆகியோரின் எழுத்துலக வெற்றிகளுக்கும் இந்த கொள்ளை கொடுக்காத' தன்மையே தலையாய காரணம். கலைத் தன்மையில் மனதை இழந்தவர் அதிலே அடியோட்டமிடும் கருத்துகள் வெற்றி கொள்ளுகின்றன. இராதாமணாளன் பிரசாரத்தை பக்குவமாக பயன் படுத்தினார். எல்லா சிறுகதைகளிலும் இறுதியில் ஏதேனும் ஒரு கருத்து காட்சியாகும். சமுதாயத்தின் 'சாமான்ய' நடப்புக்களை இத்தனை கவர்ச்சியாக—காந்த இழைப்புகளோடு எழுதியோர் வேறு எவருமில்லை!

இவர் எழுதியவைகளில் 'இன்பக்கனவு' சிறந்தசிறு கதைத் தொகுதி. இதில்காணப்படும் 'மீரா' என்ற கதை ஆசிரியரின் துணிவான கற்பனையையும், ஆற்றலையும் காட்டுகிறது. காதலைப் பற்றி அழகான வருணனைகள், சிறப்பான உவமைகளை, வாரி வழங்குவதில் இராதாமணாளன் வல்லவர். கதைகளில் மனோத்தத்துவமோ, விரிந்த உட்பொருளோ இருக்காது எனினும் எல்லாக் கதைகளிலும் கவர்ச்சி நிறைந்திருக்கிறது. இதற்கு சான்றாக "ருஷ்ய நாட்டு அழகி" ஒன்றே போதும்! போரிலே அடிமையாக்கப் படுகிறாள் ஒரு அழகி. தந்தையும் மகனும் விரும்புகிறார்கள் அவளை. தந்தை மகனின் பாதங்களில் புழுவாக நெளிகிறார், அவனோ மறுத்துரைக்கிறான். எத்தனையோ வேண்டுகோள், மன்றாடல் எதுவுமே பயன் தரவில்லை. ஆசை வெறி இருவரையும் மிருக மாக்குகிறது! மலையுச்சியிலிருந்து அந்த அழகி அதள பாதாளத்திற்கு வீசியெறியப்படுகிறாள்! அந்த வசந்தம் எவருக்கும் பயன்படவில்லை. தந்தை அவளை அடைந்தால் தனயன் பொறுக்க மாட்டான். தனயன் பெற்றால் தந்தை எரிமலையாவார்...இந்த சிக்கலான தொல்லைக்கு ருஷ்ய நாட்டு அழகி பலியாகிறாள்.

கதையின் இறுதியிலே எதிர்பாராத முடிவை பின்னி புதிய வேகத்தை அளிக்கிறார் ஆசிரியர். துவக்க நாட்களிலே இராதாமணாளன் எழுதிய எல்லா கதைகளும் உயர்ந்த இலக்கிய மதிப்பு நிறைந்தவை. சிறுகதைக்குத் தேவையான சொல்வளம்' வார்த்தைகளின் சுருங்கிய எளிமை, தென்றல் நடை ஆகிய பண்புகள் இராதாமணாளனின் எழுத்தியல்புகள்......அவரது வெற்றிக்கு இந்த திறமையான பண்புகளே அடிப்படை....

சிறுகதை எழுதி புகழ்பெற்ற எண்ணற்றவர்கள் பெருங்கதைத் துறையில் தோல்வி கண்டிருக்கிறார்கள். இதில் விந்தை இல்லை. இரண்டும் வெவ்வேறு பண்பு வாய்ந்தவை. சிறுகதையின் இலக்கணம் பெருங் கதைக்கு முற்றிலும் மாறுபட்டது. நாவலாசிரியர் என்ற தன்மையில் இராதாமணாளனிடம் எதுவுமே யில்லை. சிறுகதையை அளிக்கும்போது சிறந்த மேதையாக காட்சியளிக்கும் இராதாமணாளன் நாவலாசிரியராக அறிமுகப்படும்போது இலக்கியத்திற்கே புதியவராகத் தோற்றமளிக்கிறார்—'நவீனம் என்பது நிகழ்ச்சிகளின் குவியல் என்பதைத் தவிர இவரிடமிருந்து நாம் புதிதாக புரிந்து கொள்ள வேண்டியது எதுவுமில்லை!

இராதாமணாளனின் **'மனப்புயல்'** பெருங்கதையில் கெடுமதி படைத்தோனாக அய்யர் ஒருவர் வருகிறார், இந்த பாத்திரத்தை ஆசிரியர் நமக்கு எதற்காகப் படைத்தளித்தாரோ தெரியவில்லை. வேலைக்காரி வேதாசல முதலியாரும், ஓர் இரவு இரத்தினமும் வந்து போகாத நாடகமேடையோ, கதையோ இல்லை யெனலாம்...ஏனெனில் அந்த பாத்திரங்கள் உண்மையான வாழ்வின் வார்ப்படங்கள்...மக்களை எளிதில் கவர்ந்திடும் இன்றைய எதிரொலிகள். ஆனால் கதைகள் அனைத்திலும் இத்தகு பாத்திரங்கள் இடம்பெறுவது விரும்பத் தக்கதல்ல. மனித குலத்தில் இன்னும் சித்தரிக்காத பண்புகள் எத்தனையோ மிச்சமிருக்கின்றன, அவைகளால் இலக்கியம் பொலிவுற வேண்டும். 'மனப் புயலில்' வரும் ஆரியர் தேய்ந்து மெருகு உலர்ந்துபோன ஒரு பாத்திரம்... இரண்டாந்தர எழுத்தாளர்கள் சித்தரிக்க வேண்டிய வற்றிய படைப்பு...அதனை மணாளன் எழுதும்போது நாவலாசிரியர் என்ற தன்மையில் அவரது வளராத பண்பு தெரிகிறது. ஆசைத்தம்பியின் எழுத்துக்களில் அங்கங்கே நிழலிடும் பழுதான எழுத்தோட்டம் அப்படியே தன்மை குறையாது இராதா மணாளனிடம் காணப்படுகிறது. சிறு நிகழ்ச்சிக்கு தென்றல் நடையை துணை கூட்டி எழுதும் செயல் சிறுகதைகளில் மெருகு பெறலாம். பெருங்கதை அதுவல்ல. துப்பாக்கி சத்தமும், கொலைக் கூக்குரலும் நல்ல எழுத்தாளர்களின் கற்பனையிலே நிச்சயமாக விளைந்திடாது. மனப்புயல் தோல்வி பெற பிறிதொரு காரணம் ஆசிரியரின் உயிரோட்டமுள்ள நடை அதிலே மறைந்து விட்டது. வெறும் வார்த்தைகள் குவிந்திருக்கின்றனவே தவிர எதிலுமே உணர்ச்சி இல்லை.

சரித்திர அடிப்டையில் எழுதப்பட்ட **'இளவரசி'** நிகழ்ச்சி பஞ்சத்தால் புகழ் பெற்றது. கதையும், பாத்திரங்களும் அளவோடு தன்மையோடு அமைந்திருந்தன. **பொற்கிலை, மூடுபனி, பாலைவனம், அன்னம்** போன்ற பெருங்கதைகள் குறிப்பிடுமளவிற்கு நல்ல படைப்புகளல்ல. எல்லாவற்றிலும் விதவிதமான

8-ம் பக்கம் பார்க்க

திராவிடன்

சென்னை : 8—7—55 : வெள்ளி

கோவா போராட்டம்

உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடும் சுதந்திரமுடன் வாழ வேண்டும் என்ற உரிமை வேட்கை அந்தந்த நாட்டு—இன மக்கள் மனதில் வேரூன்றி வளர்ந்துவரும் இன்றைய நிலையில் தங்களது ஆட்சியின் பிடிப்பில் ஏறத்தாழ நானூறு ஆண்டு களாக அடக்கி வைத்திருக்கும் கோவாவை விடுவிக்க மனமில்லாது போர்ச்சுகீசிய சர்க் கார் செய்துவரும் அட்டகாசத்தையும் அடக்குமுறை ஆர்ப்பாட்டங்களையும் காணும்போது நமக்கு வியப்பாகவே யிருக் கிறது.

ஐரோப்பாவிலே சிறிய நிலப்பரப்பாக யிருக்கிற போர்ச்சுகல் இந்தியத் துணைக் கண்டத்திலே மிகமிகச் சிறிய அளவாயுள்ள கோவாவை தனது குடியேற்ற நாடாக இன் னுங்கூட ஆட்டிப் படைப்பது அந்த சர்க்கா ருக்குள்ள ஏகாதிபத்ய வெறியைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தைவிட சிறிய தீவான இங்கிலாந்து கடந்த இருநூறு ஆண்டுகளாக தனது பிடிப்பில் வைத்திருந் தாலும் இந்தியாவினால் இங்கிலாந்து தொழில் வளம் பெறவும் அதே சமயத்தில் இந்தியாவையும் கூடுமான அளவு தொழில் துறையில் காலடி எடுத்து வைக்கவும் செய் தது. அப்படிப்பட்ட பிரிட்டன் கூட உல கத்தில் உருவான புதியதோர் எழுச்சியின் காரணமாக தானாகவே தனது பிடிப்பைத் தளர்த்திக் கொண்டு இந்தியத் துணைக்கண் டத்தை ஒரு சுதந்திர அரசாக இயங்கவும் துணை செய்தது.

அது போலவே பிரான்சும் கால நிலை அறிந்து தனது பிடிப்பைத் தளர்த்திக் கொண்ட விவரம் நேயர்கள் அறிந்ததேயா கும். ஆனால் கோவாவினால் போர்ச்சுகீசிய சர்க்கார் எவ்வித வளமும் பலனும் பெற முடியாத நிலையில்தான் கோவாவின் இயற்கைஅமைப்பு உள்ளது. அதுபோலவே கோவாவும் போர்ச்சுக்கீசிய சர்க்காரினால் எவ்வித பயனும் அடைந்ததில்லை.

இவ்வாறிருந்தும் போர்ச்சுக்கீசிய சர்க் கார் தங்கள் பிடிப்பைத் தளர்த்திக் கொள்ள முன் வராததின் காரணம் ஏகாதிபத்ய வெறித் தன்மையைத் தவிர வேறென்ன இருக்க முடியும்?

உலகமெங்கும் குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்த பிரிட்டனும் பிரான்சும் கால நிலையறிந்து நல்லறிவுடன் நடந்து கொண்ட சம்பவங்களைப் பார்த்தும் கூட போர்ச்சுகீசிய சர்க்கார் அறிவுடமை பெரு மல் கோவாவை விடுவிக்கும் போராட்டத் தில் ஈடுபட்டுள்ள தொண்டர்களைத் தாக்கு வதில் கைவரிசையைக் காட்டுகிறது.

இந்நிலையில் கோவாப் பிரச்னையை பேச்சு மூலமே தீர்க்கப் போவதாக இந்தி யப் பேரரசின் சார்பில் வரட்டு வேதாந்தம் பேசுகிறார் நேரு பண்டிதர்! இதைவிட விசித்திரம் என்ன வென்றால் காங்கிரசின் தலைமைப் பீடம் கோவா விடுதலைக் கிளர்ச் சியில் எந்த காங்கிரஸ்காரரும் ஈடுபடக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருப் பதுதான்!

கோவா பிரச்னையை சமரச பேச்சின் மூலமே தீர்த்துக் கொள்ள இந்தியப் பேர ரசு விரும்புவது உண்மையானால், கோவா விற்குள் நுழைய விரும்பும் குடிமக்களை தட்டுத் தடங்கலின்றி செல்ல இந்தியப் பேரரசு வழிவகை செய்திருப்பது ஏன்? இந்தப் போக்குக்கு இந்தியப் பேரரசினர் 'தசசிலம்' என்று பெயர் சூட்டி பெருமை கொள்வரோ அறியோம்!

இந்தியப் பேரரசின் இந்த இரண்டுங் கெட்டான் போக்கினை அறிந்த காரணத் தாலோ என்னவோ டெல்லிப் பாராளு மன்ற உறுப்பினர்களில் சிலர் சென்னையில் கூடி கோவா பிரச்னையை விரைவில் தீர்க்க வழிவகை கூறியுள்ளனர். எனினும் இவர் களின் முயற்சியை இந்தியப் பேரரசு எந்த அளவுக்குமதிக்கும் அல்லது நடைமுறையில் பின்பற்றும் என்பதும் ஐயப்பாட்டுக்குரி யதேயாகும்.

கோவா போராட்டத்தை ஒரு குறிப் பிட்ட கட்சியும் இந்தியப் பேரரசு மட்டும் தான் வரவேற்கிறது மற்ற கட்சிகளும் பெரும்பான்மையான மக்களும் இப்பிரச்னை யில் அக்கறை காட்டவில்லை யென்று போர்ச்சுக்கீசிய சர்க்கார் இதுவரை தப்பட் டை யடித்துக் கொள்ள முடிந்தது. சென் னையில் கூடிய சர்வகட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சியினால் அக்குறை பாடு களையப்பட்டதென்றே கூறலாம்.

புதுவை—காரை விடுதலைப் போரில் நாங்கள் மட்டுமே ஈடுபட்டோம் என்று பீத்திக் கொள்ள முடியாமற் போனது போலவே கோவா போராட்டத்திலும் காங் கிரஸ் காரர்கள் வீண் ஜம்பம் அடித்துக் கொள்ள முடியாது. இன்னும் சொல்லப் போனால் அனைத்திந்திய காங்கிரஸ் தலைவ ரின் கண்டிப்பான அறிக்கைப்படி பார்த் தால் கோவா போராட்டத்தில் இதுவரை காங்கிரஸ்காரர்கள் ஈடுபடவில்லை யென்றே கூறலாம்.

எனவே கோவா போராட்டப் பிரச்னை யில் சென்னை சர்வகட்சி கூட்டம், ஓரளவு உருப்படியான காரியத்தைச் செய்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

நிற்க சென்னையில் கூடிய டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு முக் கிய பிரச்னையை நினைவூட்ட விரும்பு கிறோம்.

போர்த்துகீசிய சர்க்காரின் பிடியிலி ருந்து விடுபடும் கோவா எதிர்காலத்தில் எவ்விதம் வாழ்வது என்பதையும் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

இன்று இந்தியப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டுள்ள ஒவ்வொரு மாநிலமும் மாகாண சுய ஆட்சி உரிமைகூட யில்லாது டெல்லி ஆட்சிபீடஆதிக்கத்துக்கு அடிமைப் பட்டே வாழவேண்டி யிருக்கிறது. இன்று ஒவ்வொரு மாநிலத்திலும் சுதந்திரக் கிளர்ச்சி நடைபெறுவதிலிருந்தே நாம் கூறும் உண்மையை உணரலாம்.

எனவே கோவா உள்பட ஒவ்வொரு மாநிலமும், இன கலாச்சார அடிப்படையில் சுதந்திரமுடன் வாழ்வதற்கு அதற்கேற்ற ஆட்சி முறையை அந்தந்த மாநில மக்களே நடத்துவதற்கான உரிமையை இந்தியப் பேரரசு விரைவில் வழங்க டெல்லிப் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பேரர சுக்கும் குறிப்பாக நேரு பண்டிதருக்கும் உணர்த்துதல் வேண்டும். இந்த அடிப்படை யில் இந்திய துணைக் கண்டத்தின் ஒற்று மையை உருவாக்காத வரையில் கோவா இந்தியாவுடன் இணைந்து விடுவதால் மட் டுமே சிறப்படைந்துவிடும் என்று யார் கூறி னாலும் அது கடைந்தெடுத்த பித்தலாட்டத் திற்கே ஒப்பாகும் என்பதையும் நினைவு படுத்துவதுடன் இதை டெல்லிப் பாராளு மன்ற உறுப்பினர்கள் கவனத்தில் வைத்து ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நடக்க இருப்பவை

பஞ்ச நதிக்குளம் தி. மு. க.

திருத்துறைப்பூண்டியை அடுத்த பஞ்ச நதிக்குளம் தி. மு. கழக சார்பில் 8—7—55 மாலை 6-மணிக்கு கீழச்சேத்தி மாரியம்மன் கோயில் திடலில் முத்துப் பேட்டை ந. தருமலிங்கம் தலைமையில் பொதுக் கூட்டம் நடை பெறும். தோழர். என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவார்.

அன்று காலை 9-மணிக்கு பஞ்சநதிக் குளம் தி. மு. கழக செயலாளர், பரஞ் ஜோதிக்கும் தோழியர் சேதுபதிக்கும் கீழச் சேத்தியில் மணமகன் இலலத்தில், தோழர் என். வி. என். தலைமையில் திருமணம் நடைபெறும். முத்துப்பேட்டை ந. தரும லிங்கம் மற்றும் பலர் பேசுவர்.

பம்பாய் தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம்

10—7—55 ஞாயிறு காலை 10-30 மணி யளவில் பாண்டுப் தி.மு. கழக பணிமனையில் நடைபெறும். மாநில மாநாட்டிற்கு நிதி அனுப்புதல் போன்ற முக்கிய பிரச்னைகளி ருப்பதால் பொதுக் குழு பிரதிநிதிகளும் கிளைக் கழக செயலாளர்களும் தவறாது வருகை தருமாறு வேண்டுகின்றேன் என ப. தி. மு. க. பொதுச்செயலாளர் எஸ்.தியா கராசன் அறிவிக்கிறார்.

மதுரையில் நாடகம்

சத்தியவாணிமுத்து அம்மையார் படிப் பக நிதிக்காக 10—7—55 ஞாயிறன்று மாலை 6-மணிக்கும் இரவு 10-மணிக்கும் மதுரை விக்டோரியா எட்வர்ட் மண்டபத் தில் மதுரை மாவட்ட தி. மு. க. செயலா ளர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் கருணாநிதி கலை மன்றத்தாரின் 'மூன்று ஒலிகள்' என்னும் நாடகம் நடைபெறும் கட்டணம் ரூ. 2, 1, அணா 8.

சித்தூர் தி. மு கழகம்

10—7—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு ஆற்றங்கரைத் திடலில் மாபெருங் கூட்டம் நடைபெறும். தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவார்.

அன்று மாலை 4-மணிக்கு தி. மு. கழகக் கிளையொன்றினையும் தோழர் என். வி. என். துவக்கி வைப்பார்.

திருமண அழைப்பு

10—7—55, ஞாயிற்றுக் கிழமை காலை 8-30 மணிக்கு மேல், மீர்சாகிப் பேட்டை வெங்கடாசல முதலித்தெரு, 128ம் எண் ணுள்ள இல்லத்தில் தோழர். கோ. லோக நாதனுக்கும், தோழியர், தனலட்சுமிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர். கோ. இள வரசு தலைமையில் நடைபெறும். தோழர், என். வி. நடராசன் மற்றும் பலர் வாழ்த் துரை வழங்குவர்.

கிராண்டுலயன் வ. உ. சி. மன்றம்

ரெட் ஹில்ஸ் அடுத்த கிராண்டுலயனில் 12—7—55 செவ்வாய் மாலை 6-மணிக்கு 3-ம் ஆண்டு நிறைவுவிழா காஞ்சி மணி மொழியார் தலைமையில் நடைபெறும். தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ் செழியன், தோழர் ஏ. கே. சாமி எம்.சி. பேசுவர்.

சென்னையில்

மாநில மாநாட்டு நிதிக் கூட்டம்

10—7—55 காலை 9 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில் தோழர் அலிசேக் மன்சூர் தலைமையில் 'எது தேவை' என் னும் பொருள்பற்றி தோழர் டி. கே. சீனி வாசன் சொற்பொழிவாற்றுவார். நன் கொடை அணா 8, 4.

தோழர்கள் பெருவாரியாக வந்து மாநில மாநாட்டு நிதிக் கூட்டத்தை சிறப் பிக்க வேண்டுகிறோம்.

—சென்னை மாவட்ட தி. மு. க.



கதை விளக்கம்!

அமுதாவும் நர்மதாவும் சந்தித்தனர். தூண்டில் புழுவை வேதனைப் புழு சந்தித்தது. அந்தச் சந்திப்பு நிகழ்ந்த நேரத்திலே...... **குற்றாலத்தில்!**

*

37

இரவு தேய்ந்து கொண்டேயிருந்தது. கண்ணாடி ஜன்னலுக்குப் வெளியே தெரிந்த நட்சத்திரங்கள் பாலத்துவாசியின் இதயத்தைப் போலத் துடிதுடித்துக் கொண்டேயிருந்தன. கைக் கடியாரத்தையும் — வேதனை ரேகை படிந்த முகத்தோடு தூங்கிக் கொண்டிருந்த சேகரையும் மாறி மாறிப் பார்த்தான்; எதையோ முடிவு செய்து கொண்டவனைப் போல...ஓசைபடாமல் கதவைத் திறந்து கொண்டு வெளியே புறப்பட்டான் பாலத்துவாசி!

கையிலிருந்த டார்ச்சு ஒளி வழி காட்டப் பாதையிலே நடந்து போய்க் கொண்டிருந்தான். வேகமான நடை மலைச்சாரலருகே அவனைக் கொண்டுவந்து நிறுத்தியது. இரவின் அமைதியை அழித்துக் கொண்டிருந்த அருவியின் இரைச்சல் பயங்கரமாகத்தானிருந்தது, நீண்டு வளர்ந்திருந்த மரங்களிலே, கூடு கட்டிக் குடி புகுந்த குயில் குஞ்சுகளும், பறவையினங்களும் கிச்சுக் குரலிலே ரகசியம் பேசிக் கொண்டேயிருந்தன.

புதுப் பங்களாவின் முகப்பிலே பஞ்சு மெத்தையிலே படுத்துக் கிடந்த ஆஸ்திரேலிய நாய் குலைத்துப் புரண்டது. டார்ச் ஒளியை அணைத்துவிட்டு இருட்டினூடேயே நகர்ந்து—நகர்ந்து போனான். இறை தேடச் செல்லும் புலிக்கு பதுங்கும் முறைகளா தெரியாது?

பங்களாவுக்கும் பின்னேயிருந்த இரண்டு மாடிக் கட்டிடத்தைக் கூடத் தாண்டிவிட்டான் பாலத்துவாசி. ஆனால் திக்குத் தெரியாமல் விழித்து நின்றான். மெதுவாக டார்ச்சை அழுத்தினான். எதிரே யிருந்த மொட்டை மாடியிலிருந்து கிளம்பிய டார்ச் ஒளி பாலத்துவாசியின் முகத்திலே விழுந்தது. கையிலிருந்த தன் டார்ச்சை ஆட்டினான் பாலத்துவாசி. தட்டுவதற்கும் முன்பே கதவைத் திறந்து கொண்டு குள்ள உருவத்தினன் படபடப்போடு வரவேற்றான்.

'மயக்கம் தெளிந்துவிட்டது!'

...என்று அழும் குரலிலே அந்தக் குள்ள உருவத்தினன் கூறி வைத்தான்.

தெளிந்து விட்டதா...என்று திகைப்போடு கேட்டு நின்ற பாலத்துவாசி உள்ளே நகர்ந்து கதவைச் சாத்தினான்.

வெள்ளை அடிக்காத அறைக்குள்ளே வெள்ளிச் சிரிப்பழகி வனஜா படுத்துக் கிடந்தாள். அவளின் மலர்க் கரத்தை முத்தமிட்டிருந்த கண்ணாடி வளையல்கள் உடைந்து தரையை தஞ்சமடைந்திருந்தன. கூந்தலிலே கொஞ்சிய மலர்ச்சரம் — மூலையிலே அழுது கொண்டிருந்தது. பளிங்கு மேனியைப் போர்த்தியிருந்த பட்டு ஜாக்கெட்டை ஓரத்திலே கிழிந்து கிடந்தது. பாலத்துவாசி கையோடு கொண்டுவந்திருந்த டார்ச்சை ஜன்னலிலேயே வைத்து விட்டு வனஜாவை நோக்கி நகர்ந்தான். தூங்கிய புலி விழித்தெழுவது போல வனஜா எழுந்து நின்றாள். காலிலே குத்திய கண்ணாடி வளையலைக்கூட லட்சியம் செய்யாமல் முன்னோக்கி நகர்ந்தான்.

'...முல்லைச் சிரிப்பழகே! முள் காட்டில் நடந்து வரவைத்து விட்டாயே என்னை!'

'முட்டாளே! என் நிலையைப் பார். பள்ளிக்குச் சென்ற என்னை படுக்கையறைக்கு அழைத்து வந்து பாதகம் புரிந்திருக்கும் பேயனே! என் வாழ்வுக் கொடியை ஒடிப்பதிலே உனக்கேனடா அவ்வளவு களிப்பு'

'தேன் கூட்டிலே கல் வீசுவது தேன் வேட்டைக்காரனுக்கு விளையாட்டுத்தானே, எனவே களிப்படைகிறேன். சுவை தரும் சுந்தரப்பாவையே! சூறாவளியல்ல நான் — பேயனுமல்ல...... கலங்காதே! உன்னைக் கண்டேன்— அதிலே உலக அழகைக் கண்டேன். நானோ கட்டிளங்காளை— நீயோ குமரி புது வீணைக்கு புது தந்திகள் சேர்த்தால்...!'

"மரண இசை கிளம்புமென்று உனக்கென்ன தெரியாதா? என்னோடு வாழ நீயா! அடபைத்தியமே! இதற்காகவா இந்தச் சூது நாடகம் நடத்தினாய். என் லட்சியத்தை—வாழப் போகும் முறையை நீ தெரிந்திருந்தால், இந்த அழிவுத் திட்டத்துக்கு வழிவகுத்திருக்க மாட்டாய்"

'அது தெரிந்துதான் — உன் வாழ்வுமுறை எப்படிப் போகுமென்று தெரிந்திருந்ததால் தான் ...இந்த வலையை விசியாகிலும் உனைப் பிடிக்கத் திட்டமிட்டேன் வனஜா!'

'என் வாழ்வுக் கதை தெரியுமா உனக்கு?'

'கதையும் தெரியும் — அந்தக் கதையின் நாயகன் சேகரையும் எனக்கு மிகமிக நன்றாகத் தெரியும். எனக்கு அவனைப் புரியுமளவுக்கு — உனக்கு அவனைப் புரியாது. நான் முன்னரே அதைப் பற்றி விளக்கமாகக் கூறியிருந்தாலும் கேட்க மாட்டாய். எனவேதான் என் இதயத்திலே புதுக் கருத்து உதயமானது. அந்த உதயத்தின் ஒளியைத்தான் இப்போது காணுகிறேன்'

'விழியிருந்துங் குருடான அழிவுக்காரனே! கோமானின் பண ஓசைக்கோ, சீமானின் சிரிப்பொலிக்கோ அடிமையாகி யிருப்பவளல்ல நான். சேகர்தான் என் வாழ்வின் திருவிளக்கென நம்பியிருந்த என்னை சோகக் குகையிலே தள்ளிவிட்டாயே பாவி... படுமோசக்காரா! விபசாரத்துக்கு என்ன விலையானாலும் கொடுக்கத் தயாராகி யிருக்கும் நாசக்காரனே விட்டுவிடு என்னை!'

'கரத்தில் சிக்கிய அழகுரோஜாவை தூரத்திலே தூக்கியெறிய நானென்ன பித்தனா—ஏமாளியா? வானவில்லின் வர்ணஜால அழகு காட்டும் இந்த மேனிக்காக என் வாழ்வையே பணயம் வைத்திருக்கிறேனே...கோமளம்... தாமரை உதட்டைத் திற...!'

"உதவாக்கரையே—ஊர் சிரிக்குமடா உன்னையும் என்னையும் பார்த்துக் கைக்கொட்டிச் சிரிக்கும்!"

"ஊர் சிரிப்பதற்காக — நாம் அழ முடியுமா? பூங்கொடி ஊரார் செய்யாத எந்தக் காரியத்தை நாம் செய்கிறோம். பசியைத் தணிக்கப் பட்டுத் திரையைத் தொங்க விட்டுக் கொண்டு பகட்டாக பேசுகிறானே அவனையும் விடக் கேடு கெட்டவனல்ல நான். என்னையும் விடக் கேடு கெட்டவர்கள்...சுக வாசிகளாக பெரிய மனிதர்களாக உலவும் போது...பேசுவதில்லையே ஊர்! வாயைத் திறப்பதில்லையே! இப்போது நம்மைப் பார்த்துச் சிரிக்க யோக்கியமேது—தைரியமேது?

(அடுத்தவாரம்)

அடுத்த வாரம் ஜூலை 15.

●

திராவிடன் இதழில்

* சென்னை மாநில மக்களுக்கு முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியார் தீட்ட யிருந்த மடல். —நக்கீரன்

* பம்பாய்த் தோழரின் மனமுருகும் கடிதம்.

ஆகியவைகளும் **பேராசிரியர் பேசுகிறார்** தொடர்ச்சியும் அடுத்தவாரம் திராவிடனில் வெளிவரும்.

—நிர்வாகி 'திராவிடன்'

வாசகர்களுக்கு

வணக்கம். கவிஞர் எம். எஸ். ராமசாமி அவர்களுக்கு உடல்நலன் குன்றியிருப்பதால், 'நாடு என்றால் என்ன' என்னும் தொடர் கட்டுரை வெளியிட இயலவில்லை. உடல் நலமுற்றதும் தொடர்ந்து வெளிவரும்.

ஆசிரியர் 'திராவிடன்'

முல்லைச் சரம்!

தொகுத்தது "டபிள்யூ"

●

இருபது ஆண்டுகட்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தெழுந்த அவாவே யாகும்.

—**காந்தியார் (1927)**

தமிழ் மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஓர் இனியமொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந்நாளிலுங் கூட அறிஞர் பலர் இருந்தனர்—இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறியக் கிடக்கின்றது. இந்தியாவில் ஓரினம் ஏற்பட வேண்டுமானால் சென்னை மாகாணத்துக்கு அப்புறமுள்ளவரும் தமிழுணரல் வேண்டும்.

—**காந்தியார்**

தமிழே இந்தியாவின் பொது மொழியாதற்குரியது.

—**காந்தியார்**

தமிழ் மக்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன் பிறந்தவர் போலத் தோன்றுகிறார்கள்,

—**காந்தியார்**

வேறொரு மொழியைக் கற்க விரும்பித் தாய் மொழியைப் புறக்கணிப்பது எந்த மாகாணத்திற்கும் நன்மையன்று. —**காந்தியார்**

மாணவர்கள் தங்களால் இயன்றவரையில் எல்லாக் காரியங்களையும் பகுத்தறிவைக் கொண்டு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பது மிக முக்கியமானது.

—**காந்தியார்**

மதம் மதம் என்று எல்லாவற்றையும் யான் கொள்ளேன். மதத்தின் பெயரால் செய்யப்படுங் கொடுமைகளை யான் ஏற்க மாட்டேன்...அறிவிற்குப் பொருந்துவனவாயில்லாத நூல்களின் கடவுள்தன்மையை யான் மறுப்பேன்

—**காந்தியார்**

மேல்நாட்டுப் பெண்களை நம் நாட்டுப் பெண்கள் காப்பி யடிக்க வேண்டாம். அவர்களின் போக்கு அவர்களது நாட்டுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றதாக இருக்கலாம். நம்நாட்டு நிலைக்கு அது ஒத்து வராது.

—**காந்தியார்**

பஞ்சாப் செலவு!

வீரத் தோற்றம்! போர்க்களத்தில் பகைவரை புறமுதுகிட, நொறுக்கித்தள்ளி, முறியடித்து வெற்றி ஒலி எழுப்ப, துதிக்கை தூக்கி, எழிலுடன் வளைத்து முழங்கிடும் முகவாய்க் காட்சி! எங்கே பகையென எடுத்து இடும் அடியின் மிடுக்கு! ஆ!... இனி என்று காண்பேன்? இழந்தேன் இன்று! மீளா இடியுண்டேன்!

எழில்மிகு யானையை புது டில்லியில் இற்றைக்கு சரியாக 18 மாதங்களுக்கு முன்பு வாங்கினேன். யானை இருந்தாலும் ஆயிரம் பொன்! இறந்தாலும் ஆயிரம் பொன்! எனவே விலையைப் பற்றிக் கூறத் தேவையில்லை,

யானையை நான் கைக்கொள்ளும்போது பக்கத்தில் நண்பர் ஏ. பி. சனார்த்தனம் இருந்தார். அவர் கண்ணில் பட்ட கொக்கு ஒன்றைப் பற்றினார். அதை என்னிடமே ஒப்படைத்தார், சற்று நேரத்திற்கெல்லாம் சிங்கம் ஒன்றும் சிக்கியது. விடவில்லை!

யானைக்குச் சிங்கம் பகையல்லவா? எனவே அச்சிங்கத்தை தோழர் வ. வீராசாமி வசம் விட்டுவைத்தோம். வீரர்—சாமியல்லவா அவர்? அவரிடம் பதுங்கியே ஒய்ந்தது. பழகிக் கொண்டும் விட்டார் சிங்கத்தை.

இவ்வேட்டைகளுக்குற்ற சந்தர்ப்பம் யாது?

1949ம் ஆண்டிலிருந்து எனக்கு பஞ்சாப் செல்ல வேண்டுமென்ற நீங்கா அவா. அந்த அவா ஐந்தாண்டு காலமாக என் உள்ளத்தில் ஊறி ஊறி எப்போது பஞ்சாப் செலவு — (செலவு என்றால் செல்லுதல் என்க) எப்போது பஞ்சாப் செலவு —என்று உறுத்தி வருத்தியது.

பஞ்சாப் தோழர் ஒருவர், பெரியார் திருமணத்தின்போது கடிதம் ஒன்று எழுதியிருந்தார்.

யார் அந்த பஞ்சாப் தோழர்? அவருக்கும் பெரியாருக்கும் என்ன தொடர்பு? அவரைக் கண்டிப்பாய் அறிந்தே தீர வேண்டுமென்று, அவரது விலாசத்திற்கு மடல் ஒன்று அனுப்பினேன்.

இவ்வாறாக எனக்கும் அவருக்கும் கடிதச் சிநேகம் வளர்ந்தது, கற்றை கற்றையாகக் கடிதங்களை பரிமாறிக் கொண்டோம்.

ஐந்தாண்டுகள் ஓடின! கடிதக் குவியலில் இருந்து சிறுகச் சிறுக பஞ்சாப் தோழரின் வாழ்க்கை வரலாற்றைக் கூட்டினேன். நெடுங் கட்டுரையாக ஆக்கினேன் "அய்யா அவர்களை கடித மூலமாகவே அணுகி ஒப்புதல்பெற்று, கட்டுரையை "விடுதலை" யில் வெளியிட்டுக் கொள்ளும் வாய்ப்பையும் பெற்றேன்.

அப்படியே ஆங்கிலத்திலும், வெட்டுக் குறிப்புகளை ஒட்டி ஒட்டி, பஞ்சாப் தோழரே தமது சுய சரிதம் தீட்டும் முறையில், கட்டுரையாக ஆக்கினேன். மீண்டும் கடித மூலமே, சண்டே அப்சர்வர். திரு. பி. பால சுப்ரமணியம் அவர்களை அணுகி, அவர் ஒப்புதல் பெற்று ஆங்கிலக் கட்டுரையையும் அப்போதைய "சண்டே அப் சர்வர்" வார இதழொன்றில் வெளியிட்டுக் கொள்ளும் வாய்ப்பையும் பெற்றேன்.

அவற்றை யெல்லாம் கண்ணுற்ற அருமை பஞ்சாப் தோழர் என்னை வெகுவாகப் பாராட்டி, கண்ணுறக் காணத் துடிப்பதாக நீண்ட கடிதமொன்று எழுதினார். அவரைக் காண விழைந்த எனது நீண்டநாள் அவாவும் மெய்யுறும் நாள் ஒன்றும் வந்தது.

அந்த நாள் பெப்ரவரி 1954-ல் வந்தது. பயணத்தைத் துவக்கினேன். பஞ்சாப் சேர்ந்தேன். பஞ்சாப் தோழரைச் சந்தித்தேன். மகிழ்ச்சிப் பெருக்கு எல்லை கடந்து ஓடியது. அவரது விருந்தினனாக — அல்ல அல்ல— போதாது—அவரது சொந்த மைந்தனாகவே மூன்று நாட்கள் உரையாடி, உண்டு மகிழ்ந்து, அவர்தம் உற்றார், உறவினர், ஊரார், ஊர் எல்லாவற்றையுங் கண்டு களித்து, பிரியா விடை பெற்று பிரிந்து திரும்பினேன். திரும்பும்வழியில் டில்லியில் 'மண்டபடி!'

புதுடில்லியில் திரு வ; வீராசாமி அவர்களின் தயவில் அவரது 'கான்ஸ்டிடியூஷன் ஹவுஸ்' அறையிலும், திரு பேபி கந்தசாமி அவர்களின் தயவில் 'நார்த் அவென்யூ பிளாக்' கட்டிடம் ஒன்றிலும் சிலநாட்கள் தங்கி அப்போது அங்கு வந்திருந்த எனது நண்பரின் தோழமையுடன், டில்லி பாராளுமன்றம், செங்கோட்டை, குதுப்மினார், ஜும்மா மசூதி, பிர்லா மந்திர், ராஜகட்டம் காந்தியடிகளின் சமாதி, அவரைச் சுட்டு வீழ்த்திய இடம், இன்னோரன்ன பல இடங்களை பார்வையிடும் வாய்ப்பைப் பெற்றேன். (விரிக்கிற் பெருகும்)

அதுபோது புது டில்லியில் குறைந்த செலவு வீடுகள்—கண்காட்சி ஒன்று நடந்தது. அங்கேதான் யானையைப் பெற்றதும், கொக்கைக் கொண்டதும், சிங்கம் சிக்குண்டதும்! அப்படிப்பெற்ற யானையைத்தான் இன்று ,இழந்து மனந் தாங்காது இதை எழுதலானேன்,

பிறகு டில்லியைவிட்டு நகர்ந்து ஆக்ரா வந்து சேர்ந்தேன், தாஜ்மஹால் இன்னும் மற்ற மற்ற சரித்திரச் சின்னங்கள் ஃபெட்டாபூர்சிக்ரி நெடுங்கோட்டை (விரிக்கிற் பெருகும்) முதலியவைகளை கண்டு மனமகிழ்வோடு வீடடைந்தேன்,

சரி! அந்த பஞ்சாப் தோழர் யார்? அவருக்கு தமிழகத்தில் நேர்முகமாகப் பேசி அறிமுகமானவர்கள் மூன்றே பேர்தான், பெரியார் ஈ. வே. ரா., அறிஞர் அண்ணா, அடியேன் மூன்றாமவன்,

கடிதத் தொடர்பாலும், மற்ற மற்ற புறத் தொடர்பாலும் இது நாள்வரை சந்திக்காத அவரது மூன்று தோழர்கள் திரு எஸ். இராமநாதன் சண்டே அப்சர்வர் பாலசுப்ரமணியம். சென்னை பல்கலைக் கழக ஹிந்தி பேராசிரியர் ஒருவருமாவார்கள்.

பஞ்சாபில் சீர்திருத்த, சுயமரியாதைச் சூறாவளிப் பிரசாரம் செய்ய பெரியார் அவர்களுக்கும் அண்ணா அவர்களுக்கும் மேடை வகுத்துத் தந்தவர் அவர்.

அவர் முதியவர். சாதிஒழிப்புக் காகவும், இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகவும் அரும்பாடு பட்டயர்ந்தவர். அவரைக் கண்டு திரும்பியதும் யான் அவரைப் பற்றி இரண்டு கட்டுரைகள், தமிழில் ஒன்றும், ஆங்கிலத்தில் "இன்டியன் ரேஷனலிஸ்டு"க் கென்று ஒன்றுமாக எழுதி வெளியிட்டுள்ளேன்.

அவர் காந்தியாரோடும் ஜின்னாவோடும், இந்து மதத்தைப் பற்றியும், இந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றியும் நேரில் வாதப் பிரதிவாதம் செய்தவர்.

டாக்டர் அம்பேத்கார் அவரது கூட்டுத் தோழராவார். அப் பஞ்சாப் முதியவர் தீண்டாமை ஒழிப்புத் தந்தையுமாவார்.

லாலா லஜபதி ராயுக்கும் அவருக்கும் கொள்கையளவில் பகையுண்டு.

பெரியார், அக்காலத்தில் நடத்திய ஆங்கில சஞ்சிகையாம் "ரிவோல்ட்" டிலும் அவரைப் பற்றிய சிற்சில குறிப்புகள் காணக் கிடக்கின்றன.

அவரைப் பற்றி இன்னும் விளக்கமாக அறிய நமது திராவிடன் வாசகர்கள் குறைந்தது ஆயிரம் பேர்களாவது கடித மூலம் விழைந்தால், மீண்டும் எழுத வாய்ப்பு நேரலாம். உங்கள் எண்ணம் அதுவாயின் உடனே "திராவிடன்" ஆசிரிருக்கு அறிவியுங்கள்:

"திருவேடகம்"

தலைமைக்கழகம்: அறிக்கை 19/55

ஜூலை 15:

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

வரும் ஜூலை 15-ம் நாளை தி. மு. கழகத்தின் மும்முனைப் போராட்ட நினைவு நாளாக எல்லாக் கிளைக் கழகங்களும் கொண்டாடுமாக!

தென்னாட்டவரை அடிக்கடி அலட்சியப்படுத்தி பேசிய பண்டித நேருவுக்குக் கண்டனத்தைத் தெரிவிக்கவும் வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றலை அறிவிக்கவும் நடத்தப்பட்ட

இரயில் நிறுத்தப் போராட்டம்

ஆச்சாரியாரின் ஆகாத ஆரம்பக்கல்வித் திட்டத்தை அகற்ற வேண்டும் என்று வற்புறுத்த நடத்தப்பட்ட

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வி எதிர்ப்பு மறியல் போராட்டம்

வடநாட்டு அரசியல் ஆதிக்கம்—முதலாளித்துவ ஆதிக்கம்—மொழி ஆதிக்கம் ஆகியவற்றின் அறிகுறியாக இருந்துவரும் டால்மியாபுரம் என்ற புகைவண்டி நிலையப் பெயரை அந்த இடத்தின் பெயரான கல்லக்குடி என்று மாற்றுவதன் மூலம், மேற்கண்ட ஆதிக்கங்களை எதிர்க்கும் சக்தி தென்னாட்டில்—திராவிடத்தில் உருவாகிறது என்பதை இந்திய அரசியலாருக்கு உணர்த்தவும் வடநாட்டு ஆதிக்கம் அகல வேண்டும் என்ற உணர்ச்சியை திராவிட மக்களுக்கு ஊட்டவும் நடத்தப்பட்ட

டால்மியாபுரப் பெயர் மாற்றப் போராட்டம்

ஆகிய மூன்று போராட்டங்களும் மூன்று முனைகளில் 1953 ஜூலை 15-ம் நாள் சிறப்பாக நடத்தப்பட்டன.

அந்தப் போராட்டங்களின் மூலம் பெற்ற வெற்றிகளைப் பற்றிப் பொது மக்களுக்கு நினைவு படுக்கவும், பெற வேண்டிய வெற்றிகள்குறித்துப் பொது மக்களுக்கு ஊக்கம் அளிக்கவும் இவ்வாண்டும் சென்ற ஆண்டைப் போலவே ஜூலை 15-ஆம் நாளை கழகத் தோழர்கள் அமைதியான முறையில் கடமை—கண்ணியம் — கட்டுப்பாடு ஆகியவற்றைப் பின்பற்றி ஊர்வலம் நடத்துதல் பொதுக்கூட்டம் கூட்டுதல், துண்டு அறிக்கை வெளியிடுதல் போன்ற நிகழ்ச்சிகளை மேற்கொண்டு கொண்டாடுவார்களாக!

ஜூலை 15-ஆம் நாள், திருச்சி மாவட்டக் கழகம் தொண்டர் அணி ஒன்று அமைத்து, டால்மியாபுர இரயில்வே நிலையப் பெயர்ப் பலகையில் 'கல்லக்குடி' என்ற அச்சிட்ட தாளை, அமைதியான முறையில், ஊர்வலமாகச் சென்று ஒட்டி, தி. மு கழகத்தின் கோரிக்கையை இந்திய அரசியலாருக்கும் பொது மக்களுக்கும் உணர்த்தும்.

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

மாநில மாநாட்டு நிதிக்காக
17-7-55 ஞாயிறு மாலை 6-30, இரவு 10-30 மணிக்கு
சேலம் விக்டோரியாவில் இரு நாடகங்கள்
சென்னை ராஜேந்திரன் நாடக மன்றத்தின் சார்பில்
எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். ராஜம், எம். என். கிருஷ்ணன், இந்திரா, மோகனா நடிக்கும்
மணிமகுடம்
புதிய நாடகம் — கதை வசனம் : கலைஞர் கருணாநிதி
கட்டணம் : ரு. 3, 2, 1, தரை அணா 8.
நகர தி. மு. கழகம் —ந; ஆர். கிருஷ்ணன் செயலாளர்

பூங்கொத்துக்கள்—தொடர்ச்சி

குறைபாடுகள்—இராதாமணாளனின் சிறப்பியல்போ, எழிலோ அவைகளில் இல்லை,

'அரக்கு மாளிகை' ஆசிரியரின் ஒரே நாடகம். 'மந்திரி குமாரி' போன்ற ராஜா ராணி' கதைகளின் நிகழ்ச்சிகள் ஆங்காங்கே வருவதால் நாடகத்தின் சுவையே கசந்து விடுகிறது. 'சுங்க மித்திரனின்' காலத்தை கருவாக்கி நிகழும் கதை...எழுதி எழுதி சலித்துப்போன சரித்திர சம்பவம்...நாடக வடிவில் வனப்பைப் பெறுததில் விசித்திரமில்லை. தனது இயல்பை வேண்டுமென்றே ஆசிரியர் சிற்சில இடங்களிலே அழித்துக் கொண்டிருக்கிறார், தேவையற்ற அடுக்கு மொழிகள், பிரசங்கள் ஆகியவை மிச்சமிருக்கும் சொல்லழகைக்கூட தேய்த்து விடுகின்றன. எங்கெங்கோ வந்துபோன பாத்திரங்களின் நிழல்கள் 'அரக்குமாளிகை'யில் வருகின்றனவே தவிர பாத்திரங்களுக்கு புதிய ஜீவப் பொலிவோ, பண்போ இல்லை, நாடகத்தின் எல்லா தன்மைகளையும் இழந்த ஒருநாடகத்தை எழுதிக் காட்ட எத்தனையோ கத்துக் குட்டிகள் காத்திருக்கிறார்கள்...இதற்கு இராதாமணாளன் தேவையில்லை!

சிறுகதைகளில் தேங்கிக் கிடக்கும் கலைமதிப்பு இவரது மற்ற படைப்புகளில் மறைந்து விடுகிறது. நாடகம். நவீனம் இவைகளில் பிரசாரத்தின் நெடி அதிகமாக வீசுகிறது. வாழ்வின் உண்மைகளை சித்தரிக்க வேண்டிய யதார்த்த நிலையிலிருந்து மணாளன் ஏனோ நழுவிக் கொண்டிருக்கிறார்.

இவர் எழுதிய வாழ்க்கைக் குறிப்புகள் சுவையானவை. கலபலி, கல்லறைக்குயில் போன்ற ஏடுகளில் மேதையின் கை வண்ணம் தெரிகிறது. கல்லறைக் குயில் ஆங்கிலக் கவிஞன் பைரனின் வரலாற்றுத் தொகுப்பு. அழகு நடைக்கேற்ற இனிமையான எழிலோவியம் இது. பெண்களின் புன்சிரிப்பிலே வாழ்வைத் தேய்த்துக் கொண்ட உணர்ச்சி உள்ளத்தின் சோகக் கதைக்கு மணாளனின் எழுத்தியல்பு வனப்போடு மெருகிடுறது.

மேலை நாட்டு நிகழ்ச்சிகளை சிறுகதைகளாக வடிக்கும்போது இராதா மணாளன் புதிய இலக்கிய உலகைத் தோற்றுவிக்கும் இணையற்ற கதாசிரியராக காட்சியளிக்கிறார். இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் ஒருவரே ஒளிவிட சில பல வேளைகளில் இயலாமற் போகிறது...இது வியப்பிற் குரியதல்ல எனினும் திறமைக் கேற்ற துறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது மிக மிகத் தேவை—இந்த தன்மையில் இராதாமணாளன் நல்ல பண்புகள் நிறைந்த சிறுகதை எழுத்தாளராக நம்மவருக்குத் தோற்றமளிக்கிறார். மறுமலர்ச்சி இலக்கியத்திற்கு மணாளன் ஒரு 'இயக்கமாக'—புதிய பாணியின் போதகாசிரியராக வளரவேண்டும்—இதுவே அவரது எழுத்தாற்றலை ரசித்து வாழ்வோரின் ஒரே ஒரு ஆசை, அது நிறைவேற—தாயகம் இன்னும் பொலிவுற வருநாட்கள் துணை நிற்குமாக.

புதிய வெளியீடுகள்

●

முன்னேற்றம் ... ரூ. 1

இங்கர்சாலின் இணையற்ற ஆராய்ச்சி ஏடு

பாண்டிமுத்து ... ரூ. 1

பூவண்ணன் எழுதியது· சிறுவர் உலகின் தலைசிறந்த பொக்கிஷம்

வியாபாரிகளுக்கு 30% கழிவு, தனிப் பிரதிகள் வேண்டுவோர் தபால் தலைகள் அனுப்பவும்,

விபரங்களுக்கு ;

மக்கள் மன்றம்

38, சாமி பண்டாரம் தெரு, சென்னை-2

கெஞ்சி அலைவதோ ?

(இரெ. கோவேந்தன், முடச்சிக்காடு)

●

எடுப்பு

தஞ்சம் புகுந்தவன் தரணியை ஆண்டிட
பஞ்சையாய் நீயும் கெஞ்சி அலைவதோ

தொடுப்பு

எழு எழு எழுந்திரடா—நீ
எழு எழு எழுந்திரடா

முடிப்பு

அழுது நீ வீதியில் ஏங்குகிறாய்—அவன்
பழுதின்றிப் பாலுண்டு தூங்குகிறான்
வந்தவன் பஞ்சணையில் துயில—இங்கு
வாழ்ந்தவன் நீயும் வீதியிலா?

வந்தவன் வளமாய் வாழுகிறான்—நீ
வாழ்ந்தவன் வகையின்றி ஓடுகிறாய்
பாடுபட்டு நீ பட்டினி கிடக்க—பசு
மாடுபோல் அவன் பவனி வருகிறான்

சூட்சி செய்வதே அவன் வேலை—எழுத்
தாட்சி செய்வதே அவன் வேலை.
இவையெல்லாம் பார்த்தும் உன் நெஞ்சம்
இன்னும் உணர்வு பெறுதிருக் கோடா

இந்திராணி - பலராமன்

★

வண்ணை தோழர். ப வே· சேஷாத்திரி அவர்களின் மகள் தோழியர்· இந்திராணிக்கும் ஆரணி டவுன் கேப்டன் தோழர். கோவிந்தசாமி (நாயுடு) மகன் தோழர். ஜி· பலராமனுக்கும் 29-6-55 காலை 9¾ மணிக்கு வண்ணை புது பென்ஷனர்ஸ் 3-வது லேன், 17-வது இல்லத்தில், தோழர் என்· வி· நடராசன் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்புற நடந்தேறியது· ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் இத்திருமணத்திற்கு வந்திருந்தனர், இக் குடும்பத்தில் நடைபெறும் சீர்திருத்த திருமணம் இதுவே முதன் முறையாகும்·

மணமக்களைப் பாராட்டி தலைமை வகித்த என், வி. என், அவர்களும் தோழியர் மனோரஞ்சிதம் அம்மையாரும் பேசினர்· மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும் வாழ்த்திதழ், அன்பளிப்பு ஆகியவைகள் வழங்கபபட்டன. மணமகளின் தந்தையார் ப. வே. சேஷாத்திரி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார், இதன் நினைவாக 'திராவிடன்' வளர்ச்சிக்கு ரூபாய் 2—0—0 அன்பளிப்பு வழங்கப்பட்டது. வரப்பெற்றோம். நன்றி—நிர்வாகி

சென்னை சர்க்கார் பஸ்...தொடர்ச்சி

எனவே சர்க்கார் பஸ் தொழிலாளர்கள்—தொழிலாளர்களே நிர்வாகிகளாகக் கொண்டு இயங்கும் தொழிற் சங்கத்தில் ஏராளமான தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து சங்கத்தின் கட்டுக்கோப்பை நிலைபெறச் செய்தால்தான் சர்க்காரும் தங்கள் போக்கினைத் தாங்களே திருத்திக் கொள்ளும் உணர்வு பெறுவர்.

ஆகவே மற்ற இரு சங்கத்தினரும் இவைகளையெல்லாம் ஆர தீர யோசித்து எல்லோரும் சேர்ந்து ஒரே சங்கமாக இயங்குவதற்கான முறையில் விட்டுக் கொடுத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

தொழிற்சங்கம் ஒன்றை நடத்தும் நிர்வாகிகள் யாராயிருப்பினும் எந்தக் கட்சியினராயிருப்பினு அச்சங்கத்தின் வளர்ச்சிக்கு, தொழிலாளர்களின் நலனுக்குப் பாதகமாக நடக்கக் கூடாது என்பதையும் இதுசமயம் வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்·

இதனால்தான் தொழிற் சங்கங்களிலே போட்டி மனப்பான்மைகளும் அதனால் தொழிலாளர்கள் வீண தொல்லைகளுக்கு ஆளாகவும் நேரிடுகிறது· எனவே சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டிலுமாவது இந்த நோய் பிடியாதிருக்க வேண்டுமென்பதே நமது எண்ணமாகும்.

—நக்கீரன்

காரைக்கால்

21—6—55 மாலை மணி 7-க்கு தி. மு. கழகத்தின் சார்பில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது· கூட்டத்திற்கு திருநல்லார் தி. மு· கழக செயலாளர் தலைமை வகித்தார்· பல கிளைக் கழகங்கள் (பொறையார், திருக்களாச்சேரி) சார்பிலும் பொதுச் செயலாளருக்கு மலர் மாலைகளும் கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பட்டன. தோழர்கள் நாகை எ, எஸ். பாண்டியன், பொறையார் சி, ஜம்பு, திருமயிலாடுதுரை, அறிவுடைநம்பி, மற்றும் பல தோழர்களும் பேசினார்கள். இறுதியாக பொதுச் செயலாளர் நன்றி தெரிவித்துவிட்டு அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகியவைகளைப்பற்றி நீண்டதோர் விளக்கவுரை தந்தார். நாகூர் அனிபா இசைவிருந்தும் நடந்தேறியது.

பிறையாறு

26-6-55 மாலை மணி 7-க்கு கடைத் தெருவில் தோழர் கோ· பொன்னுசாமி தலைமையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது· எ. எஸ். பாண்டியன், என் கிட்டப்பா, கே, எஸ். சௌந்தர் தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசினர்·

தரங்கை

26—6—55 பகல் 2 மணிக்கு போதனா முறை பற்றி மாணவர்கள் தோழர் கருணாகரன் தலைமையில் மூவர் மன்றம் ஒன்று ஏற்படுத்தினர், மன்றத்திற்கு தலைவர் தா. செல்வராசு, செயலாளர் ஞா. பிலிப், பொருளாளர் அ. இன்பராஜ் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்·

மாயூரம்

3—7—55 ஞாயிறு இரவு 8 மணிக்கு மாயூரம் நகர தி· மு· கழக செயற்குழுக் கூட்டம் கூறைநாடு ஆசிரியர் வேலாயுதம் மன்றத்தில் செயலாளர் என், கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது, அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

23—6—55 அன்று நடைபெற்ற அண்ணா கூட்ட வரவு நன்கொடை ரூ 448—2—0. செலவு (ரூ 225 நிதி உட்பட) ரூ 409—6—0 மீதி இருப்பு ரூ 38-11-6.

மாயூரத்தில் ஜூலை 15 போராட்ட நாளை கொண்டாடு முகத்தான் ஓர் மாபெரும் ஊர்வலம் நடத்துவது.

சென்னை மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டம் அமுலிலிருந்தும் 'இங்கிலீஷ் மருந்துகள்' என்ற பேரால் சர்க்காரால் லைசென்ஸ் வழங்கப்பட்டு போதை வஸ்துக்கள் விற்கப்படுவதையும் கள்ளச் சாராயம் காய்ச்சுவது குடிசைத் தொழிலாக நடைபெற்று வருவதையும் நிறுத்துவதற்கு சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருப்பதைக் குறித்து இச்செயற்குழு வருந்துவதுடன் உடனடியாக இதற்கு ஆவன செய்ய சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

பம்பாய்—கொலாபா

கொலாபா தி· மு. கிளைக் கழகத்தின் செயற்குழு உறுப்பினராகிய தோழர் எஸ், எஸ், முத்து அவர்கள் தாயகம் செல்வதை முன்னிட்டு 3—7—55 அன்று ஆஸ்ட்ரேலிய ஓட்டலில் கழகத்தின் சார்பாக தேனீர் விருந்து தோழர் எஸ்· கே· ராஜு தலைமையில் நடைபெற்றது, தோழர் முத்து அவர்களைப் பாராட்டி கழகத்தின் சார்பாக குடும்ப விளக்கு என்ற புத்தகம் வழங்கப்பட்டது, தோழர்கள் ஆறுமுகம் க. ச· செகநாதன், கே. கே. இராமநாதன் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

மீர்சாகிப்பேட்டை அழகிரி நாடக மன்றத்தாரின்

இணையற்ற நாடக விருந்து

அத்தான்

சமூக நாடகம்

●

9—7—55 சனி மாலை 6-மணிக்கு

எழும்பூர் மியூசியம் தியேட்டரில்

பிரசண்ட விகடன் ஆசிரியர்

தோழர் நாரண துரைக்கண்ணன்

தலைமையில் நடைபெறும்

கட்டணம் ரூ. 2, 1, அணா 8.

வி. கன்னியப்பன் அமைப்பாளர்

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

20

சென்ற பத்தொன்பதாவது நூற்றாண்டின் கல்வி நிலைமையைக் கூறி வரும்போது பச்சையப்ப முதலியார் கோவிந்த நாயக்கர், செங்கல்வராய நாயக்கர் ஆகியோர்களையும், அவர்களின் திரண்ட செல்வத்தின் உதவியினால் கல்வித்துறை வளர்ச்சி யடைந்த வரலாறுகளையும் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

பச்சையப்ப முதலியார் 1754-ம்

பச்சையப்ப முதலியார்

ஆண்டு சென்னையை யடுத்துள்ள பெரியபாளையத்தில் பிறந்தார். இவரது பெற்றோரின் பூர்வீக ஊர் காஞ்சிபுரம். தந்தை விசுவநாத முதலியார்; தாய் பூச்சியம்மாள். அகம்மடிய வேளாளர்கள்; கருவுற்றிருந்த காலத்தில் கணவனை யிழந்தாள் பூச்சியம்மாள். ஏழ்மை பிடித்துக் கொண்டது. பூர்வீக ஊரான காஞ்சிபுரத்தைவிட்டு தனது இரு பெண் குழந்தைகளுடன் பெரியபாளையம் வந்தடைந்தார் பூச்சி அம்மையார். பெரியபாளையத்தில் ரெட்டிராயர் என்பாரது ஆதரவில் சில நாள் இருந்து வந்தனர் தாயும் சேயும்.

இங்கு இப்படி ஜீவனம் செய்து வரும் காலத்தில்தான் 1754-ல் பச்சையப்பர் பிறந்தார். ஆதரவளித்து வந்த ரெட்டிராயரும் காலமாகி விடவே ஆதரவின்றி அல்லலுற்றனர் பூச்சியம்மையும் குழந்தைகளும். வறுமைப் பிணி வாட்டி வைக்கவே குழந்தையுடனும் சிறுமிகளுடனும் சென்னை வந்து சேர்ந்தாள். சென்னையில் பிரபல துவிபாஷியாக இருந்துவந்த பௌனி நாராயண பிள்ளை ஆதரவில் இருந்து வந்தார்கள் அம்மையும் மக்களும். பச்சையப்பர் வாலிப பருவம் அடையவும் துவிபாஷி வேலைகளைத் தாமும் கற்று தேர்ச்சியடையலானார், சிறுகச் சிறுக இவ்வேலையில் லாபம் தேடிய பச்சையப்பர் 1776-ம் ஆண்டிற்கு முன்னும் பின்னுமாக ஏராளமான லாபத்தை அடைந்தார் என்று கூறப்படுகிறது.

பச்சையப்பர் தமது தமக்கைப் புதல்வி அய்யாளம்மாளை கடிமணம் புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்திவந்தார். ஆனால் சந்ததி ஒன்றும் ஏற்படாததை உத்தேசித்து வேதாரண்யம் சோழிய வேளாளர் ஒருவருடைய மகளான பழனியம்மாளை இரண்டாவது மணம் செய்துகொண்டார். இந்த அம்மாளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

இப்படி இரு தாரங்கள் கொண்டதினால் பச்சையப்பர் மிகுதியும் வருந்த

பச்சையப்பன் கல்லூரி வரலாறு

நேரிட்டது. கடைசி காலத்தை கும்பகோணம் நகரில் கழித்து வந்தார். அங்கு இருக்கையில்தான் தனது சொத்துக்களைப்பற்றிய உயில் எழுதி முடித்தார். வாழ்நாள் முடிவிற்கு வந்துவிட்டதை யறிந்த பச்சையப்பர் திருவையாற்றிற்குச் சென்றார். அங்கு 1794-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் தேதி காலமானார். நாற்பதே வயது அடைந்த பச்சையப்பர் தனது குறுகிய காலத்திற்குள் லட்சம் லட்சமாக சம்பாதித்து செலவிட்டது வியப்பே ஆகும்!

பச்சையப்பர் காலமான பிறகு அவரது சொத்துக்களைப் பற்றிய வழக்கு இரு மனைவிகளாலும் தொடரப்பட்டு நடந்து வந்தது. அவர்களும் பச்சையப்பரின் புதல்வியும் காலமாகிவிடவே அவரது சொத்துக்களுக்கு வாரிசுஇன்றி கண்டவர்களும் வழக்குத் தொடரலாயினர். 1826-ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டார் ஈக்விட்டி மாஸ்டருக்கு ஒரு உத்தரவு பிறப்பித்தனர். அந்த உத்தரவில் பச்சையப்பர் மரண சாசனத்தின்படி நடந்துவரும் தர்மகாரியங்கள் பற்றிய விவரம், அவரது சொத்துக்களின் விவரம் ஆகியவைகளை சேகரித்து தெரிவிக்கும்படி கூறப்பட்டிருந்தது.

இந்த சமயத்தில்தான் அதாவது 1826-ல் ஜியார்ஜ் நார்ட்டன் என்பார் சென்னை அட்வகேட் ஜெனரலாக பதவியேற்றார். இவரது முயற்சியினால் பச்சையப்பரின் சொத்து விவரங்களும் அவரது சொத்திலிருந்து செய்யப்பட்டு வந்த தரும காரியங்களின் விவரங்களும் சேகரிக்கப்பட்டன. "இதனையும் மற்றெல்லாவற்றையும் பற்றி தீர்க்காலோசனை செய்து, கோர்ட்டார் 1832 அக்டோபர் 30-ந்தேதி ஒருத்தரவு பிறப்பித்தனர். அதனை அனுசரித்து ஜியார்ஜ் நார்ட்டன் அவர்கள் இந்து மதத்தினரான ஒன்பது பேரை ட்ரஸ்டிஸ் எனும் தரும பரிபாலன சபையாராக ஏற்படுத்தி தருமம் ஒழுங்காக நடைபெற வேண்டிய முறைகளையும் வரைந்து அரசாங்கத்தாருக்கு அறிவித்தார். அப்போது சென்னை கவர்னராயிருந்த லார்ட் எல்பின்ஸ்டோனிடம் ஜியார்ஜ் நார்ட்டன் அவர்கள் பச்சையப்பரின் நிதியை கல்வி அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம் என யோசனை கூறினார், ஏற்கனவே கல்வி அபிவிருத்தியில் கால் வைத்திருந்த எல்பின்ஸ்டோன் நார்ட்டனுடைய கருத்தை ஏற்பாராயினர். ஜியார்ஜ நார்ட்டனுக்கு மேற்புல விஞ்ஞான ஆராய்ச்சி முறைகட்கிணங்க நம் நாட்டுக் கட்சியைப் பெருக்க வேண்டுமென்பது எண்ணம். இவ்வெண்ணத்துடன்தான் அவர் பச்சையப்பன் தரும பரிபாலன போர்ட் திட்டத்தைத் தயாரித்தார். அத்திட்டத்தில் கோயில் தரும காரியங்கட்கு போக மீதியுள்ள தொகையை கல்விக்கூடங்கள் நிறுவுவதற்கு பயன்படுத்தும்படி திட்டம் கூறியது.

'அப்போது பச்சையப்ப முதலியாருடைய முதல் 4, 47, 267 ரூபாய் இருப்பதாகவும், ஒன்பது வருடத்திற்குப்பின் தருமத்தை நடத்த முயலுவதால் வட்டியில் 3,14,239 ஆக விருத்தியாயிருப்பதாகவும், ஆகமொத்தம் 7, 61, 506 ரூபாய் இருப்பதாகவும் கணக்கு ஏற்பட்டது இந்தத் தொகையில், சென்னைப் பட்டணம் சுப்ரீம் கோர்ட் அதிகாரத்துக்கு வெளிப்பட்ட காசி தருமத்துக்கு என்று 38,545 ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டது. மிகுதியிருந்த ரூபாய் 7,22,961. இதில் சிதம்பரம், திருவரங்கம், திருவல்லிக்கேணி முதலிய இடங்களில் நடக்க வேண்டிய தருமங்களுக்கு ரூபாய் 3,33,200 போக மிகுதி யிருக்கும் ரூபாய் 3,89,761க்கு வரும் வட்டியில் ஆண்டு ஒன்றுக்கு 4,200 ரூபாய வெளியில் கல்வி அபிவிருத்திக்கும், மற்ற பகுதி சென்னை மாநகரில் நடக்க வேண்டிய வித்தியாபிவிருத்திக்கும், சிலாசாசனங்கட்கும், சத்திரக் கட்டிடங்கட்கும், கல்விச்சாலைக்கு வேண்டியிருந்த கட்டிடங்கட்கும் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என ஏற்படுத்தப்பட்டது." (பச்சையப்பன்: சரித்திரக் குறிப்புகளும் தரும வரலாறும்' என்ற நூலில் திருவாளர் டி, பக்தவத்சலம் பி. ஏ. அவர்கள்.)

'பச்சையப்ப முதலியார் தருமத்திற்கென்று முதலில் ஏற்பட்ட விசாரணைக் கர்த்தர்கள் போர்டில்,

கோமலீஸ்வரன் பேட்டை சீனிவாசப் பிள்ளை தலைவராகவும், லால்

ஜியார்ஜ் நார்ட்டன்—எல்பின்ஸ்டோன் கல்வித் தொண்டின் சிறப்பு

பேட்டை வெங்கடபதி நாயகர், அக்கம்மாபேட்டை வெங்கடாசல செட்டியார், மண்ணிப்பாக்கம் சோமசுந்தர முதலியார், சிற்றேறி அருணகிரி முதலியார், தநால சுந்தரராமானுஜ நாயகர், திருவல்லிக்கேணி வீராசாமி பிள்ளை, புதுச்சேரி ராஜரத்தின முதலியார்

ஆகியோர் போர்டு மெம்பர்களாகவும் இருந்தனர்.' ('பச்சையப்பன்' என்ற நூலில் டி. பக்தவத்சலம்)

'பச்சையப்ப முதலியாருடைய தருமத்தினால் ஏற்படுத்தப்பட்ட கல்விச்சாலைகளில், முதன் முதலாய் 1842-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 'பச்சையப்பனுடைய மத்திய கல்விச்சாலை' என்னும் பெயரால் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்விடத்தில் சிறிது ஆங்கிலமும் தமிழ் தெலுங்குமே போதிக்கப்பட்டு வந்தன, முதலில் பிள்ளைகளிடம் பள்ளிக்கூட சம்பளம் யாதும் வாங்காமலே இலவசமாகக் கல்வி போதிக்கப்பட்டு வந்தது. பின்னர் நாளேற நாளேற மிகப் பெருந்தொகையினராய் மாணவர்கள் சேரத் தொடங்கவே 1849-ம் ஆண்டில் சிறிய சம்பளம் விதிக்கப்பட்டுப் பின்னர் அதுவே படிப்படியாக அரசாங்க விதிதப்படி அதிகப்படுத்தப் பட்டது. அக்கல்விச்சாலை 1850 ஆண்டில் பச்சையப்பனுடைய புதிய கட்டிடத்திற்கு கொண்டுபோகப்பட்டு அதுமுதல் தேய்வென்பதே யில்லாத மாசுமறுவற்ற வளர்பிறைச் சந்திரனைப்போல் ஓங்கி வளர்ந்து உன்னதம் விளைத்துக்கொண்டிருக்கின்றது." (பச்சையப்பன்' என்ற நூலில் டி. பக்தவத்சலம்.)

1858-ம் ஆண்டிலிருந்து அக்கல்விச்சாலை மாணர்கள் சென்னைப் பல்கலைக்கழக பிரவேச பரிட்சைக்கு அனுப்பப்பட்டு வந்தனர். 1865-ம் ஆண்டு இக்கல்விச்சாலை நிர்வாகத்தில் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவற்றில் முக்கியமானது மேற்படி கல்விச்சாலையின் துவக்க வகுப்புகள் 'கோவிந்த நாயக்கர் பிரைமரி பள்ளிக்கூடம்' என்னும் பெயரில் வேறுபடுத்தப்பட்டதேயாகும். கோவிந்த நாயக்கர் பிரைமரி பள்ளிக்கூடம் என்பது தனியாகப் பிரித்து நடத்தப்பட்டதேனும் அது பச்சையப்பன் கல்விச்சாலையைச் சேர்ந்ததாகவும் அத்தரும ட்ரஸ்ட்போர்ட் நிருவாகத்திற்குட்பட்டதாகவுமே நடந்துவருகிறது.

பச்சையப்பன் கல்லூரிககு மிஸ்டர்

*

ஜியார்ஜ் நார்ட்டன்

*

பேசில் லவரி என்பார் முதல் பிரின்சிபாலாக அமர்ந்தார். இவர் காலத்தில் கல்லூரி புகழத்தக்க வளர்ச்சியை அடைந்தது. 1876-ல் மிஸ்டர் டி. ர. க்ருக்ஷாங்க் எம். ஏ. பிரின்சிபாலாக வந்தார். இவர் காலத்தில் இக்கல்லூரி இரண்டாந்தர காலேஜாக உயர்ந்தது. 1884-ம் ஆண்டில் மிஸ்டர் ஜான் ஆதம் எம், ஏ. பிரின்சிபாலாக நியமிக்கப்பட்டார். இவர் காலத்தில் இக்கல்லூரி முதல்தர காலேஜாக உயர்ந்து வளர்ச்சியடைந்தது. 1890—91-ல் முதன் முதலாக பி. ஏ பரிட்சைக்கு பச்சையப்பன் காலேஜ மாணவர்கள் அனுப்பப்பட்டனர். 1896-ல் இக்கல்லூரிக்கு ஒரு ஹாஸ்டல் கட்டப்பட்டதும் 1937-ல் சேத்துப்பட்டில் பெரியதொரு ஹாஸ்டல் நிறுவப்பட்டதும் குறிப்பிடவேண்டியதாகும்.

10-ம் பக்கம் பார்க்க

இலங்கைப் பிரதமரே தமிழரின் உரிமையைப் பறிக்காதீர்!

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று கூறினூர் புரட்சிக் கவிஞர். செந்தமிழ் நாட்டினில் செத்த மொழி இந்தி மொழியினை திணிக்க மீண்டும் வடவர் வரிந்து கட்டி நிற்கின்றனர். எப்படியும் இந்தியினை இந்தியாவின் பொதுமொழியாக்கி விட வேண்டும் என்ற வெறித் தன்மையில் இறங்கியுள்ளன சில வடநாட்டு வெத்துவேட்டுகள்... ஆனால் இவர்களின் பத்தாம் பசலிப் போக்கை எதிர்த்து வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்...தாய் மொழியினை காப்பாற்ற 'தாலமுத்து நடராசன் ஆகிய இரு வீரர்கள் தங்களின் உயிர் தித்திப்பையும் எண்ணுமல் செய்த தியாகத்தையும் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை' என்று ஆயிரக்கணக்கானவர்கள் சிறைக் கொடுமைக்கு ஆளானதையும் தாய்மொழிக்கு வந்த ஆபத்தினை தடுக்க கட்சி வேறுபாடு இல்லாமல் ஒன்று திரண்டு வெற்றி கண்ட மொழி போராட்டத்தை எவரும் மறக்க முடியாது.

இதனைத்தான் இலங்கையில் மொழிப் பிரச்னையைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கும் பிடிவாத குணம் படைத்த கூட்டத்தாருக்கும் நினைவூட்ட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

இங்கு வதியும் தமிழர்கள் (சிங்களவர் அகராதிப்படி திரடா மக்கள்) தமிழ் 'வாழ்க என தங்கள் உரிமையைக் கூறி வருகின்றனர். ஆனால் சிங்களம் ஒழிக என்று அதன் பொருளல்ல. அப்படி கோஷம் போடும் மக்களைப் பார்த்து கள்ளத்தோணி என்று ஏசுகின்றனர் புத்தர் வழி வந்தோர் என்று கூறும் சிலர். தமிழும் சிங்களமும் அரசாங்க மொழிகளாக்கி உள்ளோம் என்று கூறிய இலங்கை அரசாங்கம், இன்று இலங்கை அரசாங்க பல்கலைக் கழகத்தில் மட்டும் ஏன் தமிழை போதனு மொழியாக ஏற்படுத்தவில்லை? சிங்களம் மட்டும்தான் சர்வகலாசாலையின் போதனு மொழி என்ருல் தமிழுக்கெங்கே மதிப்பு? தமிழருக்குத்தான் எங்கே வாழ்வு? இலங்கையின் பொதுதேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தமிழர்கள் மீது வெறியை கிளப்பி விட்டால் மட்டுமே சிங்கள மக்களிடத்தில் ஆதரவு கிடைக்கும் என்று அரசாங்க கட்சியினர் கருதுகிருர்கள் என்று எதிர்க் கட்சியினர் கூறுவதில் என்ன தவறு இருக்க முடியும்? இன்று இலங்கை பல்கலைக்கழகத்தில் தமிழ் புறக்கணிக்கப் படுகிறது? நாளை சர்க்கார் அலுவலகங்களில்......? பின்? தமிழ் நிலை என்ன? இந்த லட்சணத்தில் தமிழ் மந்திரிகள் சைவ சித்தாந்தம் பேசிக்கொண்டு வருகின்றனர்!

எனினும் பிரதமர் கொத்தலவாலா அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். நாடாள வந்தவர்களே, வெந்த புண்ணில் வேல்கொண்டு குத்துவது நேர்மையாகாது. அது போலவே இலங்கைத் தமிழர்களின் மொழி உரிமையையும் சீருகுலைக்கச் செய்யாதீர்கள் என்று பணிவன்போடு நினைவூட்டுகிறேன்.

—ஏ. எஸ். மணவைத்தம்பி, இலங்கை.

செங்கல்வராய நாயக்கர் டெக்னிகல் இன்ஸ்டிடூட் கோவிந்த நாயக்கர் பிரைமரி பள்ளி வரலாறுகள்

திராவிட நாட்டு கல்வி—தொடர்சசி

பச்சையப்பன் பெயரால் வெளியூர்களிலும் கல்விச் சாலைகள் நிறுவப்பட்டன. 1846-ம் ஆண்டில் காஞ்சிபுரத்தில் பச்சையப்பன் பெயரால் ஒரு சிறிய பாடசாலை நிறுவப்பட்டது. இது நன்கு நடைபெற்றமையின் இருபதாண்டிற்குப் பிறகு அஃது ஓர் உயர்தர பாடசாலையாக்கப்பட்டு இப்போது இரண்டாந்தர காலேஜாகநடைபெற்று வருகிறது இவ்வண்ணமே சிதம்பரத்தில் 1850-ம் ஆண்டில் பச்சையப்பன் பெயரால் சிறிய பள்ளிக்கூடமொன்று ஸ்தாபிக்கப்பட்டு 1869ம் ஆண்டு முதல் ஓர் உயர்தரப்பள்ளியாய் ஓங்கி வளர்ந்துள்ளது.

பச்சையப்ப முதலியாருடைய தர்ம கல்வி ஸ்தாபனங்களை ட்ரஸ்ட் போர்டார் நேர்மையுடன் நடத்தி வந்ததனுல், அநேக சுனதனவான்கள் தங்களுடைய சொத்துக்களையும் அத்தருமத்துடனே சேர்த்து தரும கல்வி சம்பந்தமானவைகளுக்கு பயன்படுத்தும்படியும் அதே பச்சையப்பன் ட்ரஸ்ட் போர்டாரே அவற்றை நடத்தி வரும்படியும் ஏற்பாடுகள் செய்தனர். அவர்களுக்குள் சென்னையில் மிகத் தனவந்தராய் வசித்துவந்த ஆரனேரி கோவிந்த நாயக்கர் என்பார் ஒருவர். இக்கனவான் 1846-ம் ஆண்டில் தமது ஏராளமான பெருஞ் சொத்துக்களை தரும விஷயங்களுக்காகவும் கல்வி வளர்ச்சிக்காகவும் பச்சையப்பன் தரும பரியாலன சபையார்கள் அவைகளை ஏற்றுக் கொண்டு, 1856-ம் ஆண்டில் கோவிந்த நாயக்கர் பெயரால் சில உபகார சம்பளங்களை ஏற்படுத்திப் பச்சையப்பன் மாணவர்கள் பலருக்குக் கொடுத்து வந்தார்கள், 1864-ம் ஆண்டில் கோவிந்த நாயக்கர் பெயரால் ஓர் ஆரம்பக் கல்விச் சாலையானது ஸ்தாபிக்கப்பட்டுப் பின்னர் அது ஒரு மத்தியதரக் கல்விச்சாலையாக உயர்த்தப்பட்டது." ('பச்சையப்பன்' என்ற நூலில் டி, பக்தவத்சலம்)

பச்சையப்ப முதலியார் தருமத்தோடு கலந்து செய்யப்படும் பல பெயர் தருமங்களில் மற்ருென்று மிக முக்கியமானது பி டி.வி. செங்கல்வராய நாயக்கர் அவர்களுடைய தருமமாகும். பி. டி, வி, செங்கல்வராய நாயக்கர் 1829-ம் ஆண்டில் பிறந்தவர், இவருடைய தகப்பனுர் பெயர் பெருமாள் நாயக்கர் சென்னை ராணுவத்தில் சுபேதார் மேஜராக இருந்து வந்தார். செங்கல்வராய நாயக்கருக்கு முப்பது வயதாக இருக்கும்போதே அவரது தகப்பனுர் பெருமாள் நாயக்கர் மரணமடைந்தார். தமக்குக் கிடைத்த பங்கு சொத்துக்களை வைத்துக் கொண்டு வியாபாரத்தில் இறங்கினுர். மெசர்ஸ் ஷாண்ட் அண்ட் கம்பெனியின் துவிபாஷியாக நெடுநாள் விளங்கிப் பெரும்புகழ் அடைந்தார். மிகவிரைவில் நாயக்கர் பெருஞ் செல்வந்தராக விளங்கினுர். எல்லா சாதியினருக்கும் உணவும் உடையும் பொருளும் கொடுத்து உதவி புரிந்து வந்தார். தமது குலத்தவருக்கு விசேஷமாக உதவியளித்து ஆதரித்தார். 1867-ம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தில் (இதை அட்சய வருடப் பஞ்சம்' என்பர்) மக்களுக்கு பெரும் அளவில் உதவியளித்துள்ளார். நாயக்கரவர்கள் 1870லும் 1873லுமாக தமது மரண சாஸனத்தை எழுதிவைத்தார். 1873-ம் ஆண்டு மே மாதத்தில் இறந்தார். கோயில்கள் பலவற்றில் அவரது தருமங்கள் நடைபெற்றன. அனுதைப் பிள்ளைகளை வைத்து ஆதரித்து அவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கும் கைத்தொழில் பயிற்றுவிப்பதற்கும் அன்னுர் உதவிகள் புரிந்தனர். நோயுள்ளவர்கள் தம் பிணித்துயர் நீங்க வைத்தியசாலை வைப்பதற்கும் நிதி உதவினுர். இவரது கால்வழி வந்தவர்கட்கும் மற்றும் சில உறவினருக்கும் திக்கற்றிருக்கும் விதவைகளுக்கும் குழந்தைகளுக்கும் உதவி செய்ய பொருள் ஒதுக்கினுர், தமது வன்னியகுல சாதி மாணவர்கட்கு அவர்களது தகுதிக்கேற்ப உதவி புரியும்படி நிதியமைத்து வைத்தார், இவற்றிற்கெல்லாம் தமது சொத்தான 5,69,548 ரூபாயை மூல தனமாக வைத்துவிட்டுச் சென்ருர்.

இப்படியெல்லாம் சென்ற நூற்ருண்டில் விளங்கிய திராவிடப் பெருமக்களின் தரும சிந்தனைகளால் கல்வி வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் மிகுந்து வளர்ந்தது. இத்தகு நற்காரியங்கள் மேல்நாட்டு ஐரோப்பியர்களின் உதவியினுல் நடைபெற்றது.

பச்சையப்ப முதலியாரின் சிறப்பைக் குறிக்கும் நினைவுச் சின்னம் ஒன்றை நிறுவுவதற்கு பச்சையப்பன் ட்ரஸ்ட் போர்டார் விழைந்தனர், சென்னை காஞ்சி, சிதம்பரம் ஆகிய இடங்களில் கல்வி முன்னேற்றத்திற்கென செலவழித்ததுபோக மிகுதி மிருந்த பொருளினுல் சென்னையில் பெரியதொரு மாளிகைக் கட்ட திட்டமிட்டனர், அதற்கு 'பச்சைப்பன் மாளிகை' எனப் பெயரிடவும் முடிவு செய்தனர். 1846-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ந் தேதி மண்டபத்திற்கான அஸ்திவார விழா ஜியார்ஜ் நார்ட்டன் அவர்களால் சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது. 1850-ம் ஆண்டு மார்ச் 20-ந் தேதி இம்மண்டபம் சென்னை கவர்னர் சர் ஹென்றி போட்டிஞ்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஜியார்ஜ் நார்ட்டன் இக்காரியத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டது மறக்கற்பாலதன்று. —(தொடரும்)

—திராவிடப்பித்தன்

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு

சீயக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த

செல்வம் ராணி

ஊதுபத்திகளை

உபயோகியுங்கள்

தயாரிப்பவர் :

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம்ரோடு

தஞ்சாவூர்

Tel : WIND. Phone : 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிரோம்,

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிரோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை

" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்

" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்

" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

ரங்கோன் கப்பல்?

ஆ. மீ. அலிசேக்மன்சூர்

ரங்கோன் கப்பல்! எங்கே எங்கே என்ற கேள்வி ஆயிரமாயிரம் மக்களின் உள்ளங்களிலே இன்று ஊசலாடிக் கொண்டிருக்கிறது; மாடி வீட்டுச் சீமான்களின் நெஞ்சிலே எழுந்த கேள்வி அல்ல ; சாய்வு நாற்காலி பெரிய மனிதர்களுக்குத் தேவையான கேள்வியுமல்ல ; கப்பலேறி கடல் கடந்தால்தான் கட்டிய மனைவியையும், பெற்றெடுத்த குழந்தைகளையும் காப்பாற்ற முடியும் என்ற நிலையிலே இருக்கும் கூரைவீட்டு வாசிகளின் நொந்துபோன நெஞ்சிலிருந்து வெடித்துக் கிளம்பும் வேதனைக் குரல்தான், கப்பல் எங்கே என்பதாகும்;

ஒரு பிரயாணக்கப்பல் தடைபட்டு விட்டால், மக்களின் வசதிக்காக, இன்னொரு கப்பலை ஏற்பாடு செய்வது நல்லது என்ற அளவிலே' கோரிக்கைகளும், விண்ணப்பங்களும் இருக்கும் மற்ற நாடுகளிலே ! ஆனால் இந்த நாட்டிலே—உலகம் சுற்றும் நேரு பண்டிதரின் ஆட்சியிலே—சாதாரண ஒரு கப்பல் நின்று விட்டதற்காக, கண்ணீரை வடித்துக் காட்டி, ஆளவந்தார்களிடம் கெஞ்ச வேண்டிய சூழ்நிலை இருக்கின்றதென்றால், அதிக விளக்கமில்லாமலேயே, நிலைமையை நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது;

சென்னையிலிருந்து ரங்கோன் செல்லும் கப்பல் போக்கு வரத்து நிறுத்தப் படுவதால், எவ்வளவு அதிகமான வேதனை தரும் விளைவுகள் ஏற்படுகின்றன, என்பதை, ரங்கோனையே நம்பி வாழும் ஆயிரமாயிரம் மக்கள சிந்தும் கண்ணீரிலிருந்து இந்த சர்க்கார் உணர வேண்டும்; அதனை சர்க்கார் உணரவில்லை ; ஆனால் ஒன்றை மட்டும் உணர்ந்திருக்கிறது; பர்மா மண்ணை நம்பி வாழ்வோரில் பெரும் பகுதியினர் தென்னிந்தியர் தான் என்பதை சர்க்கார் உணர்ந்திருக்கிறது ; அதனால்தான், இந்த கப்பல் பிரச்னையிலும் வழக்கம் போல் மௌனம் சாதிக்கின்றது,

சொந்த நாடு என்ன சஹாராபாலைவனமா ! அல்ல வளம் உண்டு இங்கே, ஆனால் வழியில்லை; வகையில்லை; வழியையும், வகையையும் செய்துதர வேண்டிய சர்க்காரோ, பாண்டுங் மாநாடு பற்றி பெரிதாகப் பேசுவதில் அக்கரை செலுத்துகிறது.

பாக்கிஸ்தானிலிருந்து அகதிகள் என்ற பெயரால் நூறாயிரக் கணக்கானவர், இந்தியாவில் வந்து குவிகின்றனர். 'ஆகா பார்த்தீர்களா, அகதிகளைத் துரத்தியடிக்கின்றனர் பாக்கிஸ்தானியர்' என்று ஒப்பாரி வைக்கின்றனர் இந்திய பெரிய மனிதர்கள். நிலமும் வீடும், அதோடு பணமும் வாழ வழியும் செய்துதர இந்திய சர்க்கார் கண்ணுங் கருத்துமாக இருப்பதால்தான், பாக்கிஸ்தானிலுள்ளவர்கள் கவர்ச்சி வயப்பட்டு, அகதிகள் என்ற பெயரால் இந்தியாவில் குவிகின்றார்களேயன்றி வேறொன்றுமில்லை என்று பாக்கிஸ்தான் மந்திரி ஒருவர் சமீபத்தில் குற்றஞ்சாட்டியதிலே எவ்வளவு உண்மை பொதிந்து கிடக்கின்றது என்பதை இந்த சமயத்திலே நாம் சற்று நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆம்; இந்திய சர்க்கார் நடத்துவது 'கவர்ச்சி நாடகம்'! அகதிகள் யார்! வடக்கத்தியர்! நம்மவர் அல்ல! வசிக்க வீடு வேண்டுமா? 'தருகிறேன்' வாணிபம் நடத்த பணம் வேண்டுமா? இதோ! உழுது பயிர் செய்ய நிலம் தேவையா! இதோ எடுத்துக் கொள்— வேலை தேவையா! எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுக்கு மனுப்போட வேண்டாம். நானே ஏற்பாடு செய்கிறேன்! இவ்வளவு வசதிகளும் அகதிகளுக்கு—வடஇந்திய அகதிகளுக்கு!

ஆனால் இலங்கையிலிருந்து கொத்தலவாலாவின் உதடுகளிலிருந்து வெடித்துக் கிளம்பும் சட்டத்தின் வெந்தணலைத் தாங்க முடியாமல் தாயகத்து மண்ணுக்கு ஓடோடி வரும் மக்களுக்கு இந்திய சர்க்கார் வாழ்வுப் பிரச்னை அளிக்க உத்தரவாதமளிப்பார்களா என்று கேட்டால், முடியாது என்ற வேதனையான—ஆனால் எதிர்பார்த்த—பதில் கிடைக்கின்றது; இலங்கையை நம்பி வாழ்ந்த மக்களின் பிழைப்பிலே தான் மண் விழுந்ததென்றால், பர்மாவை நம்பி வாழும் நம் சகோதரர்களாவது சற்று நிம்மதியாகயிருக்க வேண்டுமென்ற நமது ஆசையிலும் இப்போது 'சிந்தியா கம்பெனி' மண்ணைப் போட்டு விட்டது. இந்திய சர்க்காரும் அதைப் பார்த்து வாளா இருக்கின்றது.

எஸ். எஸ் ஜலகோபால்—இதுதான் கப்பலின் பெயர். சிந்தியா ஸ்டீம்ஷிப் என்னும் வடஇந்திய கம்பெனிதான் இக்கப்பலை நிர்வகித்து வருகிறது—இந்த ஒரே ஒரு கப்பல்தான் சென்னைக்கும் ரங்கோனுக்குமிடையே, ஓடிக் கொண்டிருக்கின்றது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பிரயாணிகள் இந்த கப்பலைத்தான் நம்பி வாழ்கின்றார்கள் ஜூன் மாதம் 13-ந் தேதியன்று இக்கப்பல் ரங்கோனிலிருந்து சென்னைக்கு வந்தது. ஜூலை 3-ந் தேதி மீண்டும் ரங்கோனுக்குப் புறப்பட வேண்டும்; ஆனால் இக்கப்பல் ஜூலை 3-ந் தேதி அன்று மறுபடியும் ரங்கோனுக்குச் செல்லாதாம்! பம்பாய் சென்று விடுமாம்! இப்படிச் செய்தி கிடைத்துள்ளது.

ஆரம்பத்தில் இங்கப் பாதையில் கப்பல் விட்டவர்கள், B. I. S. N. என்ற வெள்ளைக்கார கம்பெனியாகும். இந்திய நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த பிறகு இந்தப் பாதையிலே கப்பல் விடும் உரிமை, அந்த வெள்ளைக் கம்பெனியிடமிருந்து பறிக்கப்பட்டு வடநாட்டுச் சிந்தியா கம்பெனிக்கு அளிக்கப்பட்டது ரங்கோனுக்கும் சென்னைக்குமிடையே ஆரம்பத்தில் 15 நாட்களுக்கொரு தடவை இருந்த கப்பல் போக்கு வரத்தை, தென்னிந்திய மக்களின்பால் இருந்த கருணையின் (!) காரணமாக 20 நாட்களுக்கொருமுறையென ஆக்கி விட்டனர் சிந்தியா கம்பெனியார்.

ரங்கோன்-சென்னை கப்பல்போக்கு வரத்தை ஏகபோகமாக உரிமை கொண்டிருப்பது சிந்தியா கம்பெனி! இந்த கம்பெனியின் ஜலகோபால் என்ற கப்பலைத் தவிர வேறு எந்த கப்பலும் அந்தப் பாதையில் செல்லவில்லை; ஆகவேதான் இந்த கப்பல் இப்போது திடீரென்று நின்ற காரணத்தால் ஆயிரமாயிரம் தமிழர்கள் வேறு வழியின்றி கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றனர்.

பர்மாவுக்குச் செல்லும் தமிழர்களின் நிலைதான் என்ன! பர்மாவுக்குச்சென்று அவர்கள் 'சுராஜ்மல்ஸ்' நடத்தவில்லை. சுகத்தைத் தேடித்தேடி அலையவில்லை. உடலிலே ஒட்டிக் கொண்டிருக்கிற உயிரைப் பிடித்து அழுத்தி இன்னும் கொஞ்சகாலத்துக்கு அது உடலைவிட்டு போகக்கூடாது என்பதற்காக மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்கின்றார்கள், கூலிவேலை செய்து சமையல்காரர்களாய் மாறி பிளாட்பாரத்திலே தொண்டை கிழிய கத்தி நாலு காசு சம்பாதித்து சேமித்த தாயகத்திலே உள்ள மனைவி மக்களுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். பர்மாவிலே அவர்கள் இயந்திரங்களாய் மாறுகின்றார்கள். இந்த நிலையிலேயுள்ள நமது திராவிட சகோதரர்கள் தாயகத்துக்கு வந்து மனைவி மக்களோடு நிம்மதியை மனதுக்குள்ளே வலுக்கட்டாயமாக வரவழைத்து சிலகாலம் வாழ்ந்துவிட்டு மீண்டும் தாலியையும் தாரத்தின் மற்ற சின்னஞ்சிறு ஆபரணங்களையும் அடகுவைத்து பிரயாணச் சிலவுக்குக் கடன்வாங்கி சென்னை நோக்கிக் கப்பலேற வந்தால், சிந்தை நோகும் செய்தி—"கப்பல் இனி போகாது"—என்ற செய்தி—இதனையா அவர்கள் எதிர் நோக்க வேண்டும் !

கப்பல் ஏன் நிறுத்தப் பட்டுள்ளது என்பதற்கு, சிந்தியா கம்பெனியாரின் சார்பில் சில பதில்களும் கூறப்படுகின்றன! கப்பலில் பழுது ஏற்பட்டிருக்கிறதாம் அப்படியானால் கூடியவிரைவில் கப்பல் பழுதுபார்க்கப் பட்டு, மீண்டும் ரங்கோனுக்கும், சென்னைக்குமிடையே ஓடுமா என்ற கேள்விக்கே இடமில்லாமல் மற்றொரு தகவலும் நமக்கு கிடைக்கின்றது. நாற்பதாண்டு காலமாக, மேலே குறிப்பிட்டக் கப்பல் ஓடிக் கொண்டிருந்ததால், பழுது பார்க்க முடியாத அளவுக்கு, பழையதாகி விட்டதாம்! பழுது பார்ப்பதால் பயனில்லையாம்! லாபமும் இல்லையாம் ! புதிய கப்பலேனும் விடப்படுமா என்றால் சிந்தியா கம்பெனியாரிடமிருந்து சாதகமான பதிலும் நமக்கு கிடைக்கவில்லை. காரணம், சென்னைக்கும்—பர்மாவுக்குமிடையே நடந்து வந்த வர்த்தகம் இப்போது குறைந்து விட்டதாம்.

இவ்வளவு காலமாக திரட்டிய பணத்தை மூட்டை கட்டி இரும்புப் பெட்டிக்குள்ளே வைத்து விட்டது. கொஞ்சங் கூட நன்றி விசுவாசமோ அல்லது அனுதாபமோ இல்லாமல் இந்தவிதமான தகவல்கள், வடக்கத்திய கப்பல் கம்பெனியின் சார்பில் கூறப்படுகிற தென்றால், எவ்வளவு வேதனையாக இருக்கிறது.

குறிப்பிட்ட கால அளவிற்குள் பர்மா செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள பர்மா வாழ் தமிழர்கள், அந்த குறிப்பிட்ட கால அளவும் கப்பலில்லாத, காரணத்தால், கடந்து விட்டால், பர்மாவுக்குச் செல்லும் அநுமதிச் சீட்டும் ரத்தாகி விடுமே என்ற கலக்கத்தோடு காட்சியளிக்கின்றனர் ; கட்டணம் போதாது—அதிகமான கட்டணம் தர வேண்டும் என்று சிந்தியா கம்பெனி கேட்டிருந்தால் கூட, அதனைத் தந்திருப்பார்கள் நமது சகோதரர்கள், அதனைச் செய்யாமல், கப்பலையே திடீரென்று நிறுத்தி விட்டால், அந்தக் கப்பலையே நம்பியிருந்த மக்களை திண்டாட வைத்த குற்றத்துக்குத்தானே கப்பல் கம்பெனி ஆளாக வேண்டும்!

இனி தமிழர்களின் கதிதான் என்ன? கல்கத்தாவுக்குப் போய் கப்பல் ஏற வேண்டும். ஜப்பானுக்குப் போகக் கூடிய கப்பல் இடையே ரெங்கோனிலும் தங்குகிறது இனி அந்தக் கப்பலில்தான் இவர்கள் செல்ல வேண்டும்' இப்போது அவர்கள் கல்கத்தாவுக்கு பிரயாணச் சீட்டு எடுப்பதற்கென்று அதிகப்படியான பணம் செலவு செய்ய வேண்டிய நிலையிலிருக்கிறார்கள்; சரி—அப்படி பணத்தைச் செலவுச் செய்து கல்கத்தாவிற்குச் சென்றபிறகும், அந்த கப்பலில் உறுதியாக இடம் கிடைக்கும் என்று எப்படிக் கூற முடியும்!

பர்மாவுக்குச் செல்லும் பிரயாணிகள் சுமார் 60 பேர் வரை, அந்தக் கல்கத்தா கப்பலில் ஏறிக் கொள்ளலாம். ஆனால் பத்தாயிரம் பிரயாணிகளல்லவா பர்மாவை நம்பியிருக்கிறார்கள். அவர்கள் கதி! இவ்வளவு கஷ்டங்கள் ஏற்படும் எனத்தெளிவாகத் தெரிந்திருந்தும், சிந்தியா கம்பபெனிக்கு, திடீரென்று கப்பலை நிறுத்த எப்படித்தான் மனம் வந்தது!

சிந்தியா கம்பெனி—வட இந்திய கப்பல் கம்பெனி. தென்னிந்தியர்தானே கவலையில்லை என்றிருக்கலாம். பர்மா செல்வதற்காக சென்னையிலே காத்துக் கிடக்கும் நண்பர்களுக்காக, சென்னை சர்க்கார் அதிதீவிரமாக முயற்சி எடுக்க வேண்டுமென்பதுதான் நமது வேண்டுகோளாகும். இலங்கைத் தமிழர்களை நடுத்தெருவிலே விட்டதுபோல் பர்மா வாழ் தமிழர்களையும் கைவிட்டுவிடக் கூடாது என்பதுதான் நமது ஆசை: செய்வார்களா! இல்லாவிட்டால் செயல் மறந்து, குட்டக்குட்டக் குனிந்து கொடுக்கும், ஏமாளிகளாய் இருக்கப் போகின்றனரா சென்னை மந்திரிகள்! தென்னாட்டு மக்களின் வாழ்வில் அக்கரை எங்களுக்கும் உண்டு, என்று சென்னை மந்திரிகள் கூறுவார்களேயானால், சீக்கிரத்திலேயே புதிய கப்பலை மிதக்கவிட்டு, ஏழை எளியோரின் நல்லெண்ணத்தைச் சம்பாதிப்பார்களா ! நல்லது செய்ய வேண்டும்—அதனையும் இன்றே செய்ய வேண்டும், அதுவும் உடனடியாகச் செய்யவேண்டும், செய்வார்களா சென்னை சர்க்கார்!

மாயூரத்தில் அண்ணா

●

மாயூரம் நகர தி. மு. கழகச் சார்பில் மாயூரம் நகரப் பூங்காவில் 23—6—55 வியாழன் மாலை 6-30 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. கே. நீலமேகம் தலைமை வகித்தார். பின்னர் தோழர்கள் க. அறிவழகன், என். எஸ். இளங்கோ, அ. பொன்னம்பலனார், கே ஏ. மதியழகன் ஆகியோர் பேசினர். இறுதியாக அறிஞர் அண்ணா அவர்கள் தற்கால அரசியல்நிலை குறித்தும், நேருவின் ரஷ்ய சுற்றுப்பயணம் பற்றியும் விளக்கமாக உரை நிகழ்த்தினார்கள். பொதுக்கூட்டத்தில் நகர தி. மு. கழகத்தின் சார்பின் தோழர் என். கிட்டப்பா அவர்கள் ரூ, 175 கொண்ட பணமுடிப்பை (மாவட்ட செயலாளரிடம் தந்த ரூ. 50 அன்னியில்) மாநில மாநாட்டு நிதிக்காக அறிஞர் அண்ணாவிடம் அளித்தார்.

அறிஞர் அண்ணா அவர்களுக்குஏராளமான கைத்தறி ஆடைகள் தி. மு. கழகக் கிளைகளின் சார்பிலும், மன்றங்கள் படிப்பகங்கள் ஆகியவற்றின் சார்பிலும் அணிவிக்கப்பட்டன. மாயூரம் நகரமே இதுவரைகண்டிராத அளவுக்கு அண்ணாவின் அறிவுரையைக் கேட்க மக்கள் வெள்ளம்போல் கூடியிருந்தனர்,

---

இலங்கை

இராமநாதபுரம் மாவட்டம் செல்வரசன்கோட்டை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் (இலங்கை) செயற்குழு கூட்டம் 15—6—55 அன்று கொள்ளுப்பட்டி காலிரோட் 510/4 இலக்க இல்லத்தில் தோழர் ம. சின்னமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது;

தலைவர் முன்னுரைக்குப் பின் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானங்கள் பரிசீலனை செய்யப்பட்டு பொதுச்சபைக்கு விடப்பட்டது, விவாதத்தில் தலைவர் திரு அ. ச, வேல், தோழர்களான சு. கு. மாயகிருஷ்ணன், சு. மாதவன், ம. சி. அழகையர், வே. பாக்கியம், க. சிவானந்தம், தூ. ப. இராக்கன், இரா. ச. பொன்னம்பலம் ஆகியவர்கள் கலந்து கொண்டார்கள்.

செய்திகள்

பம்பாய்

கொலாபா

18—6—55 சனி இரவு கூபரேஜ திடலில் தோழர் எ. எஸ். அன்பரசு தலைமையில் கொலாபா தி. மு. கிளைக் கழகத்தின் சார்பாக மாநில மாநாட்டு நிதி அளிப்பு விழா நடைபெற்றது. அதுபோது பம்பாய் மாவட்ட தி. மு. க. பொதுச்செயலாளர் எஸ். தியாகராசன் அவர்களையும் மற்றும் கூட்டத்திற்கு வந்திருந்த தோழர்கள் அனைவரையும் வரவேற்று தோழர் கே. கே. இராமநாதன் பேசினார். தோழர் எ. எஸ். அன்பரசு தலைமை வகித்தார். தலைவர் முன்னுரையில் நிதியளிப்பு விழா நடத்தும் நோக்கத்தைப் பற்றியும் பம்பாயில் நாம் நடத்த வேண்டிய பணி குறித்துப் விளக்கவுரையாற்றினார். அடுத்து தோழர் எஸ். கே. ராஜு பம்பாய் தி. மு. க. பொதுச் செயலாளர் எஸ். தியாகராசன் அவர்களை பாராட்டி கழகத்தின் சார்பாக கைத்தறித் துண்டு வழங்கினார். அடுத்து பம்பாய் தி. மு. க. பொதுச்செயலாளர் சொற்பயிற்சிப் போட்டியில் வெற்றிபெற்ற தோழர்களுக்கு கழகத்தின் சார்பாக பரிசுகள் வழங்கினார்.

தோழர்கள் தர்மராசன், த. மு. பொற்கோ, க. தங்கவேலன், இரா சண்முகராசன், க. க. செகநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கியபின் தோழர் எஸ். கே. ராஜு கொலாபா தி. மு. கிளைக் கழகத்தின் சார்பாக மாநில மாநாட்டு நிதிக்கு ரு 25 பம்பாய் தி. மு. க. பொதுச் செயலாளர் எஸ். தியாகராசன் அவர்களிடம் வழங்கினார். பொதுச் செயலாளர் எஸ். தியாகராசன் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கும் பாராட்டுதலுக்கும் நன்றி தெரிவித்தும் இந்த பகுதியில் கழகத்தை எம்முறையில் நடத்திச் செல்லவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

மாதுங்கா

28-6-55 மாலை சைன் அவுசிங் போர்ட் T. 15. 18 A. 161ம் நம்பர் இல்லத்தில் என், பெருமாள் அவர்கள் தலைமையில் ப. தி. மு. க பொதுச் செயலாளருக்கு வரவேற்பும் மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்பும் மாதுங்கா, தி. மு. க. சார்பாக மிக சிறப்பான முறையில் நடைபெற்றது, பொதுச் செயலாளருக்கு வரவேற்பு இதழ் ஒன்று வாசித்து கொடுக்கப்பட்டது.

தோழர் பெ. வரதராசன், தே. சா. நாதன் பே. தர்மராசன், தேவராசன். வடலைக்குயில் த. மு. பொற்கோ பி. என். செல்லையா, ஈ. எஸ். எஸ், பிச்சையா ஆகியோர்கள் பொதுச்செயலாளரைப் பாராட்டி பேசினார்கள். திரு தொ. து. அன்புச் செழியன் அவர்கள் மாதுங்கா தி. மு. க. சார்பாக 50 ரூபாய் கொண்ட பண முடிப்பை பலத்த கை ஒலிகளுக்கிடையே பொதுச்செயலாளர் எஸ். தியாகராசன் அவர்கள் வசம் கொடுத்தார். பொதுச்செயலாளர் தனக்கு வழங்கப் பட்ட வரவேற்புக்கும் மாநாட்டுக்கு அளித்த நிதிக்கும் நன்றி தெரிவித்து சிறிது நேரம் பேசினார், தேனீர் விருந்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டத் துவக்கத்திலும் கடைசியிலும் திரு தே. சா. நாதன் அவர்கள் மிக சிறந்ததொரு இசை விருந்து வழங்கினார்;

இந்த நிகழ்ச்சிகளில் சென்னையில் இருந்து வருகை தந்திருந்த—தையற் கலை வல்லுநர் தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்,

திருவள்ளுவர் கலா மன்றம்

ப தி. வ. க. மன்ற உறுப்பினர் கூட்டம் வாழைக்கட்டவாடி குடிஅரசு நிலையத்தில் 26—6—55 மாலை 6 மணிக்கு தோழர் பி. எல். கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பாவலர் பாலையா, கே எம். பிரகாசம், யு. எஸ். செல்லையா, வி. எ. ஆறுமுகப் பெருமாள், ஆகியோர் மன்ற வளர்ச்சி குறித்து சொற்பொழிவாற்றினர். அடுத்து நடைபெறவிருக்கும் கூட்டத்தில் நடந்தேறிய 'பலிபீடம் நோக்கி' நாடக சம்பந்தப்பட்ட கணக்கு விபரம் பார்ப்பதென முடிவு செய்யப்பட்டு, செயலாளர் நன்றி நவில கூட்டம் இரவு 9 மணி அளவில் கலைவுற்றது.

ஆமதாபாத்

தோழர்களுக்கு வேண்டுகோள்

தோழர்களே!

திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெற இருப்பது யாவரும் அறிந்த செய்தி இம்மாநாட்டு ஆரம்ப வேலைகளுக்கு ரூ. 25000, கழகத் தோழர்களிடம் தலைமைக் கழகம் கோரியது. அதன்படி நமது தாயகத்து மாவட்டச் செயலாளர்கள் உறுதிமொழி தந்து கழகத் தோழர்களிடம் நிதி வசூலித்து பொதுச் செயலாளரிடம் ஒப்படைத்த வண்ணமுள்ளனர். இந்த நற்செய்திகளை தாயகத்திலிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள ஆலையரசர்கள் வாழும் ஆமதாபாத் நகரத்திலே உள்ள நமக்கு நேரில் காணும் வாய்ப்பு இல்லாவிடினும் பத்திரிகை வாயிலாகப் பார்த்துப் பரவசப் படுகிறோம். தாயகத்தில் மாநில மாநாட்டு நிதியின் வேலைகள் துரிதமாக நடைபெறுகிறது. முன்பு சென்னையிலே நடந்த மாநில மாநாட்டுக்கு ஆ. தி. மு. க. சார்பாக ரூ 150 நாம் அனுப்பி நமது கடமை செலுத்தினோம். ஆனால் அப்போது நமது வளர்ச்சி மிகவும் குறைவு. எனினும் ரூ. 150 அனுப்பி வைத்தோம். இன்று நாம் முன்னைவிட அதிகம் வளர்ந்துள்ளோம், மக்கள் ஆதரவும் நமக்கு அதிகமுண்டு. எனவே முதல் மாநாட்டுக்கு அனுப்பி வைத்த தொகையை விட இரண்டாவது மாநாட்டுக்கு நாம் ரூ. 400 அனுப்புதல் வேண்டும், இதுபற்றி அவ்வப் பகுதி கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் நான் தோழர்களை நேரில் சந்தித்தபோது வாக்குறுதி தந்துள்ளீர்கள். அதன்படி வரும் 10—7—55-ல் ஆ. தி. மு. க. சார்பாக மாநிலமாநாட்டு நிதிக்குழு உண்டியல் மூலம் மாநில மாநாட்டு நிதி வசூலிக்கும். அதுபோது அவ்வப்பகுதி தோழர்கள் நிதிக்குழுவுடன் ஒத்துழைத்து நாம், இம்முறை திருச்சியில் நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டுக்கு அனுப்பவிருக்கும் தொகையை மனதில் கொண்டு மனமுவந்து நிதி தந்துதவ வேண்டுகிறேன். நிதிதரும் தோழர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் கழகச் சின்னம் (நமது இருவர்ணக் கொடி சிறிய அளவில்) தரப்படும். தோழர்கள் நிதிக்குழுவினர்களை வரவேற்புத் தந்து காலம் கடத்த வேண்டாம்—அன்று நிதிக்குழு 10 மைல் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும். இதை தோழர்கள் மனதில் கொண்டு நிதி தருவதை தமது கடமையாகக் கொண்டும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

நிதிக்குழு சுற்றுப்பயணம்: சமால்பூர் காலை 7 முதல் 10 வரை, மணிநகர் மோதிநகர், மத்தியம் 11 முதல் 2 வரை பாபுநகர் பிற்பகல் 3 முதல் 5 வரை, நரோடா, மாலை 6 முதல் 9 வரை.

ஆர். டி. அசலம், செயலாளர்

சமால்பூர்

26-6-55 ஞாயிறு மாலை 4 மணிக்கு ஆட்டாவாலா சால் ப. பாண்டியன் இல்லத்தில், ந. சரவணன் தலைமையில் செயற்குழு கூடியபோது நிறைவேறிய தீர்மானங்கள்.

கணக்குகளை பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

கழக உறுப்பினர் தி. நெடுமாறனின் பிரச்னை விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

முன்னாள் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு நன்றியும் இந்நாள் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு இச் செயற்குழு பாராட்டுதல் தெரிவிக்கின்றது.

3-வது வட்டக் கிளை

ஆமதாபாத் (நரோடா) 3-வது வட்டக் கிளைக் கழக இல்லத்தில் 26-6-55ல் மாலை 5 மணிக்கு தோழர் சு. பாபு தலைமையில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது, அதுபோது தோழர் நா. முனுசாமி, இரா. நடராசன், கே. ஜி. சேகர், ஆர். டி. அசலம், இரா. வைத்திலிங்கம் ஆகியோர் கழக வளர்ச்சி பற்றியும்—கழகத் தோழர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைபற்றியும் பேசினார்கள். பின் மாநில மாநாட்டுக்கு நிதி வசூலிக்க மூவர் கொண்ட குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. அக்குழு நகர செயலாளர் ஆலோசனையைக் கேட்டு நிதி வசூலிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

மதிவளர் மன்றம்

இச்செயற்குழு 25—5—55-ல் புது முனிசிபல் சால் ஆதிமூலம் அவர்கள் இல்லத்தில் கூடியது. அதுசமயம் ஜி. எஸ். ஐயன் பொருளாளராகவும், டி. காளிதாசன் விளம்பரசெயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மதிவளர் மன்றம் மதுரை மன்னன் தீட்டிய இன்பத்திராவிடம் எனும் நாடகத்தை நடத்துவதென முடிவு செய்துள்ளது.

பெங்களூர்

பினாக்பள்ளி

தோழர். டி. மாதவன் தலைமையில் தி. மு கழகத் தேர்தல் 12-6-55 அன்று நடைபெற்றது. கீழ்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர் ஜெ. எஸ், நாதன், துணைச் செயலாளர் எச். எம். வானன் பொருளாளர் ஜி. எப். உலூயிசு. மாவட்டப் பிரதிநிதிகள் ஏ. டி. பிரான்சிஸ், அ. அன்பன்,

செயற்குழு உறுப்பினர்கள்: கே. சோழன், இரா, தெ செல்வம். டி. மாதவன், ஜி. அண்ணாமலை, ஆர். கோபால். எம். ஜெ. ஆல்பர்ட், எஸ், மகம்மது கவுஸ், கு. வ. மணி, டி. எஸ் கோபால் ஜி. டி. சண்முகம், ரவிதாசன், சி. ப. சாரதிதாசன். நா. யா. லிங்கம், முதலியோர்

அக்கிப்பேட்டை

பெங்களூர் நகர் அக்கிப்பேட்டை தி. மு. கழக பொதுக் குழுக் கூட்டம் 12—6—55 ஞாயிறு காலை 9 மணிக்கு திரு வி. கே. நடேசன் அவர்கள் தலைமையில் கூடிற்று. அதுசமயம் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் மாவட்டச் செயலாளர் திரு. பி. சோமசுந்தரம் அவர்களின் தாயார் இயற்கை எய்தியமைக்காக இக்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

திராவிட முன்னேற்றக்கழகம் துவக்கப்பட்ட நாள் தொட்டு கழக வளர்ச்சியிலே கண்ணுங் கருத்துமாய் இருந்து காரியமாற்றி தமிழகத்தே வேறு எந்த அரசியல் கட்சியும் பெறமுடியாத அளவுக்கு செல்வாக்கை பெறச்செய்த அறிஞர் அண்ணா அவர்களை இக்குழு பாராட்டுவதுடன் புதிய பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை இப்பொதுக்குழு வரவேற்கிறது:

அறிஞர் அண்ணா அவர்களின் அரிய தொண்டிற்கு நன்றி தெரிவிக்கவும் புதிய பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்கவும் பெங்களூரில் ஏற்பாடு செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

கழக நூல்நிலைய வளர்ச்சிக்காக சிறப்பு சொற்பொழிவு கூட்ட நிகழ்ச்சி ஒன்று நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

பொதுச் செயலாளர் அவர்களின் 28—5—55 தேதியிட்ட 14/65 அறிக்கைக் கிணங்க புத்தாண்டு செயலாளராக வி. கே. நடேசன், துணைச் செயலாளராக ஜெ. கனகசுந்தரம், பொருளாளராக சி. என். சாமி, மாவட்டப் பிரதிநிதிகளாக ஜி கிருட்டிணன், எஸ். வி. பதி, செயற்குழு உறுப்பினர்களாக எ. முருகேசன், ஆர். ஆறுமுகம், பி பி. அரங்கநாதன், எம். செயராம், பி. டி. இரத்தினம், ஜி சின்னசாமி, எம். ஜி. வேர்தன், கே. இராமச்சந்திரன், ஜி. இராமச்சந்திரன், எ. சங்கரன், ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிட்டுக் குருவி சத்தின் தாது புஷ்டி லேகியம்

இந்த லேகியம் புருஷர்கள் லௌகிக சுகத்தை அனுபவிக்க சக்தி இழந்து போதல் என்னும் துக்ககரமான கொடிய வியாதியைப் போக்கி சுகம் அனுபவிக்கச் செய்யும். மேலும் சொப்பனத்தில் வீரியம் இழப்பது போன்றவற்றைத் தடுத்து பலமுள்ளவர்களாகச் செய்யும் இன்னும் விபரீத சேர்க்கையால் ஏற்படும் வியாதிகளான வெள்ளை, மூத்திர எரிச்சல், அடிக்கடி மூத்திரம் போதல், நீர்சுருக்கு, நீரடைப்பு முதலியவைகளை மாற்றி சுகமடைய செய்வதுடன் ஆண் பெண் இழந்துபோன தேகவலுவைப் பெற்று அவரவர் அவர்களது தன்மையை அடைந்து மகிழ்ச்சி அடையும்படி செய்யும். இந்த லேகியத்தை 48-நாள் சாப்பிடவேண்டும்.

இத்தாது புஷ்டி லேகியத்தை பலவித பஸ்பங்களாலும், பலவித மூலிகைகளாலும் ஒன்பது வகை வித்துக்களாலும் பலவகை வேர்களுடன் கடைச் சரக்குகளும் சேர்ந்து இத்துடன் நெய், பால், தேன் கலந்து பல பிஸ்தாக்களும் ஒன்று கலந்து அதற்குத் தகுந்த முறையில் பதப்படுத்தி மணம் குணம் பொருந்திய உருசியுடன் கூடியது. பத்தியமில்லை; சுகமடையலாம். இதனை தொடர்ந்து ஒவ்வொருவரும் அருந்தினால் ஆயுள் உள்ளளவும் மற்ற மருந்து அருந்த வேண்டியதில்லை. லேகியத்தில் தாமிர பஸ்பம், அப்ரேக் செந்தூரம். வங்க பஸ்பம் அயச்செந்தூரம், காந்தச் செந்தூரம், கல்நார் பஸ்பம் முதலியவைகளை சேர்த்துள்ள சிறந்த ஔஷதம்.

ஒரு மண்டலம் 48-நாள் சப்பிடக்கூடிய லேகியம் சேர் 2-க்கு ரூ. 6—0—0

ஒரு மண்டலம் வாங்குவோருக்கு போஸ்டேஜ் இனாம்.

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்

வியாசர்பாடி, மதராஸ்—12

கேள்வி? பதில்.

அஞ்சா நெஞ்சன்

கே: கம்பராமாயண கதாகாலட்சேபம் செய்துவந்த கம்யூனிஸ்ட்டுகள் இன்று திருக்குறளின் மேல் புதுமோகம் கொண்டிருப்பதின் மர்மமென்ன?

இரா. அ. பழனிச்சாமி, இராசிபாளையம்

ப: ராமாயணப் பிரசங்கியான முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியார், தற்போது அணுகுண்டு எதிர்ப்பு, க்ஷயரோக ஊசிதடுப்பு ஆகிய காரியங்களில் ஈடுபட்டிருப்பதால் ஆச்சாரியாரின் ராமாயண பிரசங்கத்துக்கு 'ஜால்ரா' போட்டுவந்த கம்யூனிஸ்டுகள் இந்த ஓய்ந்துபோன சீஸனில் திருக்குறள் மீது கண்ணோட்டம் போட்டிருக்கலாம்.

*

கே: முன்னாள் பொதுச் செயலாளர் இல்லாவிட்டால், தி. மு கழகமே இல்லையென்று பெரியார் ஈ. வே. ரா சொல்லியிருக்கிறாரே இதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ராசு, சுக்ரவார்பேட்டை, கோவை

ப: திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கத்தின் காரணமாக நாட்டிலே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சிக்கு அண்ணா அவர்கள் தீவிரப் பணியாற்றி யிருக்கிறார்—பணியாற்றி வருகிறார் என்பதைப் பெரியார் அவர்கள் மனமார உணர்ந்திருக்கிறார் என்பதே இதன் பொருள்.

கே: கோயபல்ஸ் பிரச்சாரம் என்பதின் அர்த்தமென்ன?

கோ. சித்தழகன், மேட்டுப்பட்டி

ப: கடந்த உலகப் போரில் இட்லரின் வலது கையாகவும் பிரச்சார பீரங்கியாகவும் விளங்கிவந்த கோயபல்ஸ் என்பவர் போரின் அன்றாட நிகழ்ச்சிகளை திருத்தியும் மாற்றியும் கூறி நேச நாடுகளுக்கும் பொதுவாக உலக மக்களுக்கும் — குழப்பம் பீதி ஆகியவைகளை உண்டாக்கி வந்தார். அந்த அளவுக்குப் பொய்ப் பிரசாரத்தில் பலே பேர்வழி அவர். எனவே கோயபல்ஸ் பிரச்சாரம் என்றால் அர்த்தம் விளங்குகிறதா தோழரே.

*

கே: திராவிட கழகமும், தி. மு. கழகமும், ஒன்றாக சேர்ந்துவிட செய்த பிரயத்தனம என்ன ஆயிற்று?

எம். சண்முகம், குன்றை

ப: ஒன்றும் ஆகவில்லை.

*

கே: அடுத்த ஜனாதிபதி பதவி ராஜாஜிக்கு கொடுக்கப்படும் என்று என் நண்பர் கூறுகிறார். நீங்கள் என்ன அபிப்பிராயப் படுகிறீர்கள்?

—டி. ஏகாம்பரம், திருவல்லிக்கேணி.

ப: நான் அபிப்பிராயம் கூறுவது இருக்கட்டும். தாம் ஒரு மடாதிபதியாக வேண்டுமென்று ஆச்சாரியார் தீவிர முயற்சி செய்துவருவதாக என் தோழரின் தோழர் ஒருவர் கேள்விப்பட்டதாகக் கூறினாராம். இந்த செய்தியின் வெற்றி தோல்விக்குப் பின்னர் உமது கேள்விக்கு பதில் கூறுகிறேன்,

*

கே: ரஷ்யாவில் (ஸோவியத் யூனியன்) உள்ள குடியரசுநாடுகள் எத்தனை?

டி. ஆதிகேசவலு, திருவொற்றியூர்

ப: பதினாறு.

அசைவமா?

சந்தேகம் :—நேரு ஒரு பார்ப்பனராச்சே! கறி, மீன் தின்பாரா?

தெளிவு :—தாராளமாகத் தின்பார்! நாக்கை தட்டித் தட்டிச் சுவைப்பார்!

சந் :—பார்ப்பனர் கறி, மீன், தின்பதா? அது எப்படி?

தெ :—நேரு பண்டிதர் ஒரு காஷ்மீரிப் பார்ப்பனர்! நம் பக்கத்தில் 'ராவ்' 'பாய்', 'ஆசார்' என்ற பட்டங் கொண்டவர்களில் சிலர் தங்களைப் 'பார்ப்பனப் பரம்பரை' என்று சொல்லிக் கொண்டு, பூணூல் அணிந்து, கறி, மீன், முட்டை முதலியவைகளைச் சேர்த்துக் கொள்வதைப்போல, காஷ்மீரப் பார்ப்பனர்களும் கறி, மீன், சாப்பிடும் அசைவர்கள் தான்! காஷ்மீரிப் பார்ப்பனர்களுக்கு, ஒரு நாளைக்குக் கறி மீன் உணவு இல்லையென்றால், அன்றைய பொழுது போவதே கடினந்தானாம்! ஆனால் அவர்கள் கறி, மீன் உணவு தயாரிக்கும் விதமே அலாதி! நெய் 'மொத. மொத' வென்று தோய்ந்து வழியும்! அதை பழக்கப்பட்டக் காஷ்மீரிகள் வெறுப்பு, சலிப்பு இன்றி சுவைத்துத் தள்ளுவார்கள்! பழக்கமில்லாதவர்களுக்குத் தெகிட்டி, வெகுட்டல் ஏற்படும்!

சந் : காஷ்மீரிப் பார்ப்பனர்கள்தான் அப்படி! நேரு கூடவா?

தெ : நேரு கூடவா என்ன? நேரு குடும்பமே அசைவந்தானாம்!

சந் : அதை நேரில் கண்டதுண்டா?

தெ : எல்லாவற்றையும் நேரில் கண்டு கொண்டிருக்க முடியுமா? கண்டவர்கள் கூறக் கேட்டதுதான்! நாட்டுச் சரித்திரத்தில் அவ்வப்போது அடிபடுகிறதிலிருந்து அறிந்தவைதான்! நேரு நம் வீட்டிற்கு விருந்துண்ண வந்தால் கறி, மீன், சமைத்துப் போட்டும் அறிந்து கொள்ளலாம்!

அவ்வளவு ஏன்? ருஷ்யாவில் நேரு 'கிரீமில் ஊற வைத்த மீன்' உணவை மாஸ்கோவில் உண்டதாகவும், ஸ்டாலின்கிராட் பகுதியின் சுற்றுப் பயணத்தின் போது 'பிரியாணி' சாப்பிட்டதாகவும் செய்தித்தாள்கள் மூலம் அறிகிறோமே! போதாதா?

இப்போது சந்தேகம் எங்கே?

—டபிள்யூ. பி. டி. எழிலன்

பேராவூரணியில் அண்ணா

சென்ற வாரம் 20—6—55 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு பேராவூரணி தி. மு. க. சார்பாக மாநில மாநாட்டு நிதியளிப்புப் பொதுக்கூட்டம் தோழர் எஸ். செயராமன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். எஸ். இளங்கோ. மதியழகன், பொன்னம்பலனார் முதலியோர் சொற்பொழிவாற்றியதற்குப்பின் அண்ணா அவர்களிடம் மாநில மாநாட்டு நிதிக்கு பேராவூரணி தி. மு. க. சார்பாக ரூ. 125, குருவிக்கரம்பை தி. மு. க. ரூ. 15, ஊமத்தநாடுகுப்பத்தேவன் வலசை தி. மு. க. ரூ. 11, சித்துக்காடு தி. மு. க. ரூ. 10 கெடுவாசல் தி. மு. க. ரூ 5, பனங்குளம் தி மு க ரூ 10, கொத்தமங்கலம் தி மு க ரூ 10 பேராவூரணி ஆதித்திராவிடத் தோழர்கள் ரூ 4 ஆகனூர் தி மு க 2-10-0, மருத்துவசங்கத்தின் சார்பாக 101 அணுக்கள் கொண்ட பணமுடிப்பு கொடுக்கப்பட்டது,

பிறகு அண்ணா அவர்கள் சொற்பொழி நிகழ்த்தினார்கள். பல தி மு க சார்பாக கைத்தறி ஆடைகளும் வரவேற்புக்களும் அளிக்கபபட்டன. தோழர் அடைக்கலம் அவர்களால் அடியிற்கண்ட முக்கிய தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன,

பேராவூரணியில் உயர்தரப் பள்ளி கட்டுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் பொதுமக்களிடம் வசூலித்த பணத்தில் மேற்படி கட்டிடத்திற்கென நிலம், செங்கல், காளவாய் முதலிய செலவினங்கள் போக மீதம் இருக்கக் கூடிய ரூபாய் பத்தாயிரத்தையும் சர்க்கார் எடுத்துக் கொண்டு பேராவூரணியில் கூடிய சீக்கிரம் உயர்தரப்பள்ளி கட்டிக் கொடுக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

பேராவூரணியிலுள்ள ரூரல் வைத்தியசாலையை மாற்றி பக்கா வைத்தியசாலையாக்க சர்க்கார் கவனத்திலுள்ளதை விலரவில் அமலாக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது

புதுக்கோட்டைக்கும் பேராவூரணிக்கும் உள்ள ரோட்டில் ஏனதி கரம்பையில் சி. எம். பி. வாய்க்கால் குறுக்கிடுவதால் அகற்று பாலங்கட்டி மேற்படி ரோட்டை பஸ் போக்குவரத்துக்காக சர்க்காரிடம் உள்ள யோசனையை கூடிய சீக்கிரம் நிறைவேற்றும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

முத்துப்பேட்டை

22—6—55 அன்று இரவு 7 மணிக்கு முத்துப்பேட்டை ஏ. எஸ். என். தி—வில் திரு என். எஸ். இளங்கோ தலைமையில் தி. மு. க. பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் ந. கருமலிங்கம், அ. பொன்னம்பலனார், கே. எ. மதியழகன் முதலியோர் பேசியபின் அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றினார், இரவு 10 மணிக்கு ந. தருமலிங்கம் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டம் தொடங்குவதற்கு முன் கொய்யா பஜாரிலிருந்து அண்ணா அவர்களை வைத்து மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு கூட்டம் நடக்கும் இடம் வந்தடைந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்து சிறப்பித்தனர். மாநில மாநாட்டு நிதிக்காக அண்ணா அவர்களிடம் செயலாளர் வ. இராமநாதன் ரூ 125 கொண்ட பணமுடிப்பு அளித்தார், முத்துப்பேட்டை சவரத் தொழிலாளர்கள் சார்பில் தோழர் பி. கோவிந்தராசன் 61 அணாவும் மற்றும் கிளைக் கழகங்கள் யாவும் மாலையிட்டப்பட்டது. பால் வியாபாரம் திரு வைரப்பன் அவர்கள் அண்ணாவுக்கு மாலையிட்டார். நகரெங்கும் தோரணங்களும் வளைவுகளும் கட்டப்பட்டிருந்தன.

தோழர் வேந்தனின் மறுப்பு

அன்புடையீர். வணக்கம். ஜூன் திங்கள் 26-ம் தேதி பெங்களூர் சு. கண்ணன் திருமணத்தில், பெரியார் கன்னடர்களை மறந்து தமிழர்களுக்குச்சேவை செய்கிறார்களென்றும், மறுபடியும் திரும்பி வந்து கன்னடர்கள் முன்னேற்றத்திற்காக பாடுபட வேண்டுமென்றும் பேசியதாக 28-6-55-ல் 'தினத் தந்தி' பிரசுரித்திருக்கிறது. நிற்க;

நான் பேசியது: 'பெரியார் ஒரு கன்னடக்காரர். அவர் தமிழ் நாட்டில் பிரசாரம் செய்து இதுபோன்ற சீர்திருத்த திருமணங்களுக்கு தமிழ் மக்களை ஊக்குவித்தார். இன்று பெரும்பாலும் இதுபோன்ற சீர்திருத்தத் திருமணங்களை தமிழர்கள்தான் செய்து கொள்ளுகிறார்கள். ஆனால் கன்னடத் தோழர்கள் அதிகமாக செய்து கொள்ளுகிறார்களா? —கிடையாது. இதை நினைக்கும்போது உண்மையிலேயே வருத்தமேற்படுகிறது. எனவே கன்னடத் தோழர்களே நம் மொழியைச் சேர்ந்த பெரியாரை திரும்பிப் பாருங்கள். பெரியார் கற்பித்ததை அண்ணா நடத்தி வருகிறார், நாம் ஏன் இதுபோன்ற திருமண முறைகளை ஆதரிக்கக் கூடாது. இனியாவது நன்றாக சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.'

இதுதான் நான் பேசிய விவரம்.

மு. கோ. வேந்தன், பெங்களூர்

மேலூர்

மதுரை மாவட்டம் மேலூர் தி.மு.க. சார்பில் 23-ந் தேதி மாலை 6-30 மணிக்கு முனியாண்டி கோவில் திடலில் மு. இராமு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மதுரை தோழர் எஸ். முத்து பேசியதாவது: தோழர் காக்கன் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரானதால் தீண்டாமை ஒழிந்து விடவில்லை யென்றும் காங்கிரசில் ஜனநாயகம் ஏற்பட்டு விடவில்லையென்றும் எந்தப் பார்ப்பனராவது கக்கனை வீட்டில் சாப்பிட அனுமதிப்பார்களா! என்று கேட்டுக் கொண்டும் காமராசர் அரசவையினரால் தீண்டாமை ஒழிப்புக்கு வெளியிடப்பட்ட விளம்பரத் தாள்களை பார்ப்பனர் நீர் மானத்திற்காகப் பயந்து கொடுத்து வெளியிடாததையும் குறித்துப் பேசினார் இறுதியாக தாஞ்சில் தோழர் மி. மனோகரன், நேருவின் மாஸ்கோ மாமழ அரசியல் பற்றியும் திராவிடநாடு பிரிவினைக்கு தக்க ஆதாரங்கள் காட்டியும் அண்மையில் திருச்சியில் நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டிற்கு பொதுமக்கள் அனைவரும் வரவேண்டுமென்று பேசி முடித்தார்.

கவசம்பட்டு

19—6—55 மாலை 7 மணிக்கு எம். வில்வநாதன் இல்லத்தில் கழகத் தேர்தல் நடைபெற்றது. எம். தெய்வசிகாமணி செயலாளராகவும் எம். சுப்ரமணியம் துணைச்செயலாளராகவும் ஜி. சாமிநாதன் பொருளாளராகவும் எம். வில்வநாதன் மாவட்டப் பிரதிநிதியாகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேற்படி நால்வருடன் செயற்குழு உறுப்பினர்கள் ஏழு பேர் இருந்தனர். கடைசியில் செயலாளர் நன்றிகூறினார்.

தளபதி

கதை—வசனம் : இறையன்பானி

சேவா சமாஜம் (அனாதைச் சிறுவர்கள் பராமரிப்பு) உதவிக்காக 3—7—55 மாலை 6-30 மணிக்கு வண்ணை தியாகராய அம்லூரி நாடக அரங்கில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் டி. ஏ. மதுரம் அவர்கள் தமது குழுவினருடன் தளபதி என்னும் நாடகத்தை நடத்தினர். அமைச்சர் மாணிக்கவேலர் தலைமை வகித்து இலவசமாக நாடகம் நடித்த என். எஸ். கே. அவர்களையும், அவரது நாடகக் குழுவினரின் சேவையைப் பாராட்டியதுடன் சேவாசமாஜத்தார் சார்பில் என். எஸ். கே., டி. ஏ. மதுரம் இருவருக்கும் தங்க மெடல்கள் பரிசளித்தார்.

கதை விவரம் :

மாவீரன் சிவாஜியின் அன்பிற்கு உரித்தானவன் தளபதி ரகோஜி. சுதர்மன் கடமை தவறா ஓர் வீரன். அவன் அன்புக் காதலி முதீஜா. முதீஜாவை சந்தித்த தளபதி ரகோஜி அவளுடைய அழகில் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தான். சதி வேலை ஆரம்பமாயிற்று. சுதர்மன் போரில் ஈடுபட்டிருந்தபோது அவனை பின் புறமிருந்து மரண எல்லைக்கு விரட்டினான் தளபதி. மணாளரின், மரண செய்தி கேட்ட மங்கையர்க்கரசி முதீஜா தானும் மாண்டுபோக முயலுகிறாள். கருவுற்றிருந்த அவள் தன் கருத்தை மாற்றிக் கொள்கிறாள்.

தனியேவிடப்பட்ட அவளை தன் காமத் தீயிக்குபலியிடமுற்படுகிறான் தளபதி தவணை விடுகிறான். தவணைக்காலம் முடிவதற்குள் தன் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்த முஜிதாவை காப்பாற்றுகிறார் நகர் காவல் வந்த நாயகன் சிவாஜி.

உண்மையை அறிந்த சிவாஜி மன்னன் கடமையிலிருந்து தவறிய தளபதியை நாடு கடத்துகிறான். உண்மை உணர்ந்த தளபதி நஞ்சுண்டு உயிர் விடுகிறான் நீதி அவையிலே. சுத்த வீரன் சுதர்மன் அவையிலே தோன்றுகிறான். தான் போர் முனைக்குச் சென்றிருந்தபோது குத்துயிராய்க் கிடந்த சுதர்மனைக் காப்பாற்றி அவன் சித்தம் தெளியும் வரை தன் கண் காணிப்பிலே வைத்திருந்த செய்தியை கூறுகிறான் சிவாஜி. பிரிந்த காதலர் கூடுகின்றனர்.

இத்துடன் ஒரு நகைச்சுவை காட்சியும் இடம் பெற்றுள்ளது. தன் மனைவியின் நிர்ப்பந்தத்தால் தளபதி ரகோஜியுடன் போருக்குச் செல்கிறான் ஒரு அப்பாவி! அவன் தோழனும் துணைக்காகச் செல்லுகிறான். போரில் நடைபெற்ற சம்பவங்களைக் கண்டு ஒளிந்து கொண்டிருந்த இவ்விருவரும் போரில் தளபதி ரகோஜி பெற்ற வெற்றியைக் கண்டு திகைக்கின்றனர். மீண்டும் ஊருக்குச் சென்றால் மற்றவர்கள் கேலி பேசுவார்களே என்றெண்ணி ஊருக்கு எல்லையிலே உள்ள ஒரு பாழடைந்த மண்டபத்தில் தங்கி தனது மனைவியையும் வரவழைத்து உணவு விடுதி அமைத்து வியாபாரம் செய்கிறான். இந்த சமயத்தில் அப்பக்கம் நடமாடும் ஒவ்வொரு தேசத்தின் படை வீரர்களுக்கேற்ப இந்த ஓட்டல்காரர்களும் (கொள்கை யில்லாதவர்களாக) கட்சி மாறுகின்றனர். இறுதியாக இவர்களின் ஏமாற்றுப் படலமும் வெளிப்படுகிறது.

கதை வசனம் துவக்கமுதல் இறுதிவரை விறுவிறுப்பாக அதுவும் உயர்ந்த முறையில் அமைந்துள்ளது.

நடிப்பு :—ஒவ்வொரு தேசத்துப் படை வீரர்களையும் வரவேற்று அந்தந்த நாட்டு அரசர்கள் படங்களையும் கொடிகளையும் தங்கள் உணவு விடுதியில் அலங்கரித்து ஏமாற்றும் கொள்கையற்றவர்களாக கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்—டி. ஏ. மதுரம் ஆகியோர் தோன்றி நடிப்பது ரசிகர்களை குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கிறது. கொள்கையில்லாதவர்களாக நடித்த இவர்கள் கடைசியில் எல்லா தேசத்துப் படை வீரர்களும் ஒன்று சேரும் கட்டத்தில் நீ எந்த நாட்டுக்காரன்—நீ எந்தக் கட்சியைச் சார்ந்தவன் என்று கேட்கும் போது "நான் சுயேச்சை கட்சி" என்னை யாரும் எதுவும் கேட்க முடியாது என்று என். எஸ். கே. பதில் கூறும்போது அரசியல் துறையிலே சிலர் செய்து வரும் திருவிளையாடல்களைப் பாமர மக்கள் மனதிலேயும் பதிய வைக்கும் தன்மையில் உள்ளது.

மற்றும் சிவாஜியாக தோன்றிய சந்திரசேகரன் கச்சிதமாக நடித்தார். தளபதி ரகோஜியாக நடித்த ஓ. என். கிட்டு. முதீஜாவாகத் தோன்றிய தோழியர் மீனாட்சி இருவரும் தாங்கள் ஏற்றுள்ளப் பாகத்தின் தன்மையை உணர்ந்து நடித்தது பாராட்டத் தக்கதாகும். வீரர்களாக நடிக்கும் பாண்டியன் தாமு, ராஜகோபால் முதலிய அனைவருமே நாடகத்தின் புகழுக்கு பெருந் துணையாய் நிற்கின்றனர். பின்னணி சங்கீதம் செவிக்கு ஓரளவு விருந்தளிக்கிறது.

"தளபதி" நாடகம் தமிழ் மக்கள் அனைவரும் தவறாது கண்டு களிக்க வேண்டிய கருத்துச் சோலையாகும்.

—வீரன்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், சோமு அச்சகம், 17, [illegible] தெரு, சென்னை-1.